# அருணா தமிழ்ப் பாடம்

முதற் படிவம்

[ சிறப்புப் பகுதி ]

ஆசிரியர்கள் :

அ. பாலசுந்தரம், பி. ஏ., எல. டி.;
தலைமை ஆசிரியர், போர்டு உயர்நிலைப் பள்ளி, ஆர்க்காடு

வித்துவான் ச. குருஸ் அந்தோணி, எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர், புனித சவேரியார் கல்லூரி,
பாளையங்கோட்டை.

அருணா பப்ளிகேஷன்ஸ்
சென்னை-17.

முதற் பதிப்பு—அக்டோபர் 1955.

[ All Rights Reserved ]

Published by
**Aruna Publications, Madras-17.**

பாரதி பிரிண்டர்ஸ், 119, பிராட்வே, சென்னை-1.

# பதிப்புரை

'அருணா தமிழ் பாடம்' என்னும் தமிழ்ப்பாடப் புத்தக வரிசையில் இந்நூல் முதல் படிவத்திற்கு ஏற்ற பொதுப் பகுதி யாகும். அரசியலார் அளித்துள்ள பாடத் திட்டப்படி சிறந்த முறையில் இந்நூல் அமைந்துள்ளதாகும். வகுப்பிற்கு ஏற்றபடி மொழிவளம், சொல்லூட்டம், வாக்கிய அமைப்பு, தெளிந்த நடை, பொருட்செறிவு, ஆற்றொழுக்கு நடை முதலியன வாய்ந்து திகழ்வது இந்நூல். பாடந்தோறும் அருஞ்சொற்களும் பொருளும், சிறு விடைவினாக்கள், கட்டுரைப்பயிற்சி, இலக்கண அமைப்பு என்பன இணைக்கப்பட்டுள்ளன. அவை மாணவர் கட்குக் கல்வியில் ஆர்வத்தை மிகுவித்து, கற்றலில் ஊக்குவித்து, கட்டுரை எழுதும் தன்மையையும், திறனையும் அளிப்பனவாகும். இந்நூல் வரிசைகளைக் கற்கும் மாணவர் தெளிந்த தமிழறிவினைப் பெறுவர் என்பது ஒருதலை. கலாசாலைத் தலைவர்களும், தமிழாசிரியர்களும் இந்நூல் வரிசைகளைப் பள்ளியில் பாடப் புத்தகங்களாக்கி மாணவர்க்கு நன்மை செய்வதுடன், எம்மையும் இத்துறையில் ஊக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பதிப்பகத்தார்

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழ் மொழி | 1 |
| 2. | நம் நாட்டு மேலோர் | 10 |
| 3. | காவிரியாறு | 18 |
| 4. | அச்சுத் தொழில் | 25 |
| 5. | இளைஞர்கள் அறிவாளராக | 32 |
| 6. | வீர வர்த்தனன் | 39 |
| 7. | பாண்டியன் நெடுஞ்செழியன் | 45 |
| 8. | கவிமணி | 51 |
| 9. | செய்யுள் பகுதி | 59 |

# 1. தமிழ் மொழி

1. மக்கள் தம் உள்ளக் கருத்தைப் பிறர்க்கு வெளியிட்டுக் கூறுதற்கு மொழியைக் கருவியாகக் கொண்டுள்ளனர். மொழி, கருத்துக்களை ஏற்றிச் செல்லும் வாகனம் என்பர் ஆன்றோர். மக்களுக்கும், விலங்குகளுக்கும் உள்ள வேற்றுமைகள் பலவற்றுள் மிகச் சிறந்தது மக்கள் மொழியைப் பெற்றிருத்தலே.

> " விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
> கற்றாரோடு ஏனை யவர்."

என்று திருவள்ளுவர் நயம்படக் கூறியிருத்தலும் அறியத்தக்கதே. உலகில் மூவாயிரம் மொழிகளுக்கு மேல் வழங்குகின்றன என்பர் மொழிநூல் வல்லார். அவற்றுள் சில, எழுத்து வழக்கில் இல்லாமல் பேச்சு வழக்கில்மட்டும் உள்ளன. சில எழுத்து வழக்கும் பேச்சுவழக்கும் பெற்றிருந்தாலும், இலக்கணச் செறிவும் இலக்கிய வளமும் இல்லாமல் இருக்கின்றன. சிலமொழிகள் இலக்கிய வளம் பெற்றிருப்பினும் பேச்சு வழக்கில் இல்லை. சில, இலக்கியங்களைப் பெற்றுப் பேச்சு வழக்கில் இருப்பினும் இலக்கணவமைதி நன்கு பெற்றவையாகக் கூறுதற்கில்லை. ஒரு சில மொழிகள் பல மொழிகளினின்றும் சொற்களைப் பெற்று அமைந்துள்ளன. இவ்வாறு மொழிகள் பல திறப்பட்டனவாய் உலகில் வழங்குகின்றன.

2. தமிழ் மொழி எழுத்து வழக்கினும் பேச்சு வழக்கினும் உள்ளதாய்த் தனக்கே உரிய இலக்கண

வமைதியும் இலக்கிய வளமும் நன்கு பெற்று அமைந்துள்ளது. தெய்வத்தன்மை வாய்ந்த தூய்மையான மொழி தமிழ் மொழி. தனித்து இயங்கும் ஆற்றல் தமிழ் மொழிக்கு உள்ளது. ஆதலால் தமிழ்மொழி உயர் தனிச் செம்மொழிகளுள் ஒன்றெனக் கூறுவர் நல்லோர். மற்றும் தமிழ்மொழி மென்மையும், சொல்வன்மையும், ஆழமும், நிறைவும் செறிவும் அமைந்த இனிமை பயக்கும் மொழி. 'தமிழ் என்பது இனிமை நீர்மை;' 'தமிழ் தழீஇய சாயலவர்' என்று கூறுவர் நல்லோர். தமிழ் மொழியைக் கூறுங்கால் சான்றோர்கள், தீந்தமிழ், தண்டமிழ், வண்டமிழ், ஒண்டமிழ், நற்றமிழ், கன்னித் தமிழ், செந்தமிழ், பைந்தமிழ், பூந்தமிழ், தேன்றமிழ், தெய்வத்தமிழ் என்று அடைமொழி கொடுத்தே கூறுவர்.

3. தமிழ்மொழி மிகத் தொன்மையானது. தமிழ் மொழியில் இன்று காணப்படும் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் முப்பது நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றியது என்றும், அதற்கும் பல நூற்றாண்டு களுக்கு முற்பட்டது என்றும் அறிஞர் கூறுவர். அவ் வாறான செம்மை வாய்ந்த, முற்ற முடிந்த இலக்கண நூல் தோன்றுதற்குத் தமிழ்மொழி எவ்வளவு பழமையான தாக இருத்தல் வேண்டும் என்பதும், இலக்கணம் தோன்றுதற்கு ஏற்றவாறு இலக்கியங்களைப் பெற் றிருத்தல் வேண்டும் என்பதும் புலனாகும். எனவே தமிழ் மொழியின் தொன்மை வரம்பிட இயலாதது. தொல் காப்பியத்திற்கு முன்பு தோன்றிய நூல்கள் கடலால் கொள்ளப்பட்டன என அறிகிறோம்.

4. தமிழ் மொழி, இயல் தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்ற மூன்று வகைப் பாகுபாட்டினைக் கொண்டது. உரை நடையும் செய்யுட்களும் கொண்டது இயற்றமிழ். இலக்கணமும் இதன்கண் அடங்கும். செய்யுட்கள் பண்ணோடும் பாணியோடும் பாடப் பெறுதல் இசைத்தமிழ். கீர்த்தனங்களும், சிந்துகளும், தெம்மாங்குகளும் வரிப் பாட்டுக்களும் இசைத் தமிழினைச் சார்ந்தனவே. நாடகத் தமிழ் என்பது கற்றறிவில்லா மக்களுக்கு அறிவு புகட்டப் பயன்படுவதாகும். இதன் கண் இயலும், இசையும் உண்டு. மற்றைய இரண்டும் கற்றோர்க்குச் செவிப்புலன் ஒன்றிற்கே இன்பம் தரும் நாடகத் தமிழ் கற்றோர்க்கும் மற்றோர்க்கும், செவி, கண் என்னும் இரு புலன்களுக்கும் இன்பம் தரும். தமிழ் மொழி இத்தகைய முத்திறப் பாகுபாட்டினைக் கொண்டமையால் 'முத்தமிழ்' என்றும் கூறுவாரா யினர். ஔவையார், "பாலும் தெளிதேனும்" என்ற செய்யுளில், "சங்கத் தமிழ் மூன்றும் தா" என்று விநாயகரை வேண்டுதல் இங்கு அறிக.

5. தமிழ் மொழியைப் பேசும் மக்கள் தமிழர் எனப்படுவர். தமிழ் வழங்கும் நிலம் தமிழகம் என்றும், தமிழ்நாடு என்றும் கூறப்படும். தமிழ்நாடு இப்பொழுது இருக்கும் அளவினதாய்ப் பண்டு இல்லை. தமிழ் மொழி இமயம் முதல், குமரிமுனைக்கும் தெற்கே இருக்கும் குமரிக் கண்டம் வரையிலும் பரவி இருந்தது. இக் காலத்தில் இந்துப்பெருங் கடலாக இருப்பது முன்னொரு காலத்தில் நிலப்பரப்பாக இருந்தது. அதனைக் குமரிக் கண்டம் என்று அழைத்தனர். அப்பகுதி கடலால் கொள்ளப்பட்டது.

"பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடு கொடுங்கடல் கொள்ள"

என்பதனால் அறியலாம்.

6. தமிழ் நாட்டினைச் சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தர்கள் ஆண்டனர். அவர்களுள் பாண்டியர் என்பார், வழிவழியாகத் தமிழ் மொழியைப் போற்றி வளர்த்தனர். பாண்டிய மன்னர்கள் தமிழ்ச் சங்கங்கள் நிறுவிப் புலவர்களைக் கொண்டு மொழியைச் செப்பம் செய்தனர். அதனால் தமிழ் செந்தமிழ் என்றும், நாடு செந்தமிழ்நாடு என்றும் பெயர் பெற்றன. மூன்பு பாண்டியர்களால் வளர்க்கப்பட்ட மூன்று சங்கங்கள் இருந்தன. அவை தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச் சங்கம் என்பன. அச் சங்கங்களில் மன்னர்களும் புலவர்களும் இருந்து பல நூல்களைச் செய்தனர். முதற் சங்கம் கபாடபுரத்திலும், இடைச் சங்கம் தென்மதுரையிலும் இருந்தன. அவ்விரு நகர்களும் கடலால் கொள்ளப்பட்ட குமரிக்கண்டத்திலிருந்ததால் அழிந்தன. கடைச் சங்கம் இப்பொழுது விளங்கும் மதுரையில் இருந்தது. கடைச் சங்கம் இன்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்குமுன்பு இருந்ததாகும். முதற் சங்கத்தில் அகத்தியரும், இடைச்சங்கத்தில் தொல்காப்பியரும், கடைச்சங்கத்தில் நக்கீரரும் தலைமைப்புலவர் பெருமக்களாக விளங்கினர் என்பர்.

7. கடைச் சங்க காலத்தில் தொகுக்கப் பட்ட நூல்கள் சில உள்ளன. அவையே சங்கத் தொகை நூல்கள் என்று கூறப்படுவன. எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் தொகை

நூல்கள் கடைச் சங்ககாலத்தில் தொகுக்கப்பட்டன. இத்தொகை நூல்கள் யாவும் மிகச் சிறந்தன. உலகம் போற்றும் பொதுநூலான திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. கடைச்சங்க காலத்திற்குப் பின் சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும், ஐம்பெருங்காப்பியங்களும், யசோதர காவியம், நாக குமாரகாவியம், சூளாமணி, பெருங்கதை என்னும் நூல்களும், தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், கம்பராமாயணம், பாரதம், பாகவதம், கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், நளவெண்பா, நைடதம் முதலான நூல்களும், பிள்ளைத் தமிழ், கலம்பகம், அந்தாதி, உலா, கோவை, பரணி, மாலை, சதகம் முதலான பிரபந்தங்கள் பலப்பலவும், தலபுராணங்களும் காலத்திற்கு ஏற்பத் தோன்றி மொழியை வளப்படுத்தின. நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம், புறப்பொருள், அகப்பொருள் என்னும் இலக்கண நூல்கள் பலவும் தோன்றின.

8. இக்காலத்தில் உரை நடை நூல்கள் பலவாகப் பல்கின. எனினும் தேசிய கவி சுப்பிரமணியபாரதியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை, கவிஞர் புதுவை பாரதிதாசன், சுத்தானந்த பாரதியார் முதலானோர் காலத்திற்கேற்ப எளிய இனிய பாடல்களை இயற்றி மக்களுக்கும் தமிழுக்கும் பெருந்தொண்டு புரிந்து வருகின்றனர். டாக்டர் உ. வே. சாமிநாதய்யர், சங்கநூல்கள் பலவற்றையும் பிழையறப் பரிசோதித்துத் திருத்திச்

செப்பமாக அச்சிட்டு உதவியுள்ளார். பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, மறைமலையடிகள், ரா. ராகவையங்கார், ந. மு. வேங்கடசாமி நாட்டார், முதலானவர்கள் சிறந்த ஆராய்ச்சி நூல்களை எழுதியளித்துள்ளனர். நாம் தாய் மொழியான தமிழை, இளமை முதல் சிறப்பாகப் பிழையறக் கற்றுச் சங்க நூல்களையும் பிற நூல்களையும் படித்து இன்புறுவதோடு தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் நம்மாலான தொண்டினைச் செய்து மகிழ்வோமாக.

## 1. அருஞ்சொற்களும் பொருளும்

இலங்கு – விளங்கும்
விலங்கு – மிருகம்
ஏனையவர் – மற்றகல்லாதவர்
வழக்கு – உலகில் நடைபெறு பெறுதல்
செறிவு – நெருக்கம்
அமைதி – அமைப்பு
பண்டு – முன்பு
கோடு – மலையுச்சி
பெருமக்கள் – மேலோர்
பிரபந்தம் – சிறுநூல்கள்
தழீஇய – தழுவிய
நயம்பட – சிறப்பாக, அழகாக
சாயலவர்–வடிவினையுடையார்
அடைமொழி – சிறப்பைவிளக்குஞ்சொல்
தொன்மை – பழமை
வரம்பிட – எல்லைசெய்ய
பாகுபாடு – பிரிவு
பன்மலைஅடுக்கம் – பலமலைத் தொடர்கள்
பரிசோதித்து – ஆராய்ந்து

## 2. சிறுவிடை வினாக்கள்

1. மொழி எதற்குப் பயன் படுகிறது?
2. மொழியை என்ன என்று கூறுவர்?
3. கற்றார் கல்லாரைப் பற்றித் திருவள்ளுவர் கூறுவதென்ன?
4. உலகில் எவ்வளவு மொழிகள் உள்ளன? எத்தகையன?

5. தமிழ்மொழி எத்தகையது? அதன் சிறப்பு என்ன?
6. தமிழ்மொழியைப் புலவர்கள் எவ்வாறு கூறுவர்? ஏன்?
7. தொல்காப்பியத்தின் காலம் யாது? அதனுல் அறிவது என்ன?
8. தமிழ்மொழியின் பாகுபாடுகள் யாவை? விளக்கு.
9. நாடகத்தமிழின் சிறப்பியல்பு யாது?
10. முத்தமிழ் யாவை?
11. 'சங்கத் தமிழ் மூன்றும் தா'; யார் யாரைக் கேட்பது? பாட்டு முழுவதையும் தெரிந்து எழுது.
12. தமிழகம் என்று கூறப்படுதைப்பற்றி அறிவதென்ன?
13. பாண்டியர் சிறப்பு யாது?
14. முச்சங்கங்களைப்பற்றி அறிவது என்ன?
15. சங்கத்தொகை நூல்கள் எவை? விளக்கு.
16. பின் தோன்றிய காப்பியங்கள் பிறநூல்கள் யாவை?
17. பிரபந்தங்கள் சிலவற்றின் பெயர்களைக் கூறு.
18. பிற்காலத்தில் தோன்றிய இலக்கணங்கள் யாவை?
19. இக்காலப் புலவர் பெருமக்கள் யாவர்? என்ன செய்கிறார்கள்?
20. ஆராய்ச்சி நூல்களை எழுதியோர் யாவர்? உ. வே. சாமிநாதய்யர் என்ன தொண்டு செய்துள்ளார்?

## 3. கட்டுரைப் பயிற்சி

கட்டுரை எழுது:

1. மொழியும் பயனும்
2. தமிழ் மொழி
3. பாண்டியரும் தமிழும்
4. தமிழின் தொன்மையும் சிறப்பும்

## குறிப்பு

சங்கத் தொகை நூல்கள்:

| 1 எட்டுத்தொகை | 2 பத்துப்பாட்டு |
| --- | --- |
| 1. நற்றிணை | 1. திருமுருகாற்றுப்படை |
| 2. குறுந்தொகை | 2. சிறுபாணாற்றுப்படை. |

3. ஐங்குறுநூறு
4. பதிற்றுப்பத்து
5. பரிபாடல்
6. கலித்தொகை
7. அகநானூறு
8. புறநானூறு

3. பெரும்பாணாற்றுப்படை
4. பொருநராற்றுப்படை
5. மதுரைக்காஞ்சி
6. பட்டினப்பாலை
7. முல்லைப்பாட்டு
8. நெடுநல்வாடை
9. குறிஞ்சிப்பாட்டு
10. மலைபடுகடாம்

3. பதினெண் கீழ்க்கணக்கு:

1. நாலடியார்
2. நான்மணிக்கடிகை
3. இன்னா நாற்பது
4. இனியவை நாற்பது
5. கார் நாற்பது
6. களவழி நாற்பது
7. ஐந்திணை ஐம்பது
8. ஐந்திணை எழுபது
9. திணைமொழி ஐம்பது
10. திணைமாலை நூற்றைம்பது
11. திருக்குறள்
12. திரிகடுகம்
13. ஆசாரக் கோவை
14. பழமொழி
15. சிறுபஞ்ச மூலம்
16. முதுமொழிக் காஞ்சி
17. ஏலாதி
18. கைக்கிலை

## 4. இலக்கணம்

நாம் பேசுகிறோம்; எழுதுகிறோம்.

பேசும் பொழுது ஒலியினால் எழுத்துக்களை உச்சரிக்கிறோம். ஒலிக்கப்படுவது ஒலி.

ஒலிக்கப்பட்டு எழுதப்படுவதற்குக் காரணமாயிருப்பது ஒலியெழுத்து.

எழுதப்படுதலால் எழுத்து எனப்பட்டது.

நாம் ஒலிக்கும் சொற்கள் பல எழுத்துக்களால் ஆயவை.

அவ்வொலிகளுக்கு வரிவடிவம் அளிக்கிறோம்.

அந்த வரிவடிவமே வரி எழுத்து.

ஒலி எழுத்து அருகிலுள்ளவர்கட்கே பயனாகும்?

வரியெழுத்து மிக்க தூரத்திலுள்ளவர்கட்கும் நம் கருத்தைத் தெரிவித்தற்குப் பயனாகும்.

## பயிற்சி

1. ஒலி எழுத்து, வரியெழுத்து ; விளக்கு.
2. வரி எழுத்து என்பது யாது? பயன் யாது?

# 2. நம் நாட்டு மேலோர்

1. பாரத நாடு பழம்பெருமை படைத்த நாடு. இந் நாடு எல்லாவகை நலன்களும் பெற்றுச் சிறந்து விளங்குவதாகும். இயற்கை யெழிலும், செயற்கை வளனும் சிறந்தது இந்த நல்லநாடு. நவதானியங்களும், பொன்னும் மணியும் கிடைக்கும் குன்று வளமுடையது நம் பாரதநாடு. கல்வி, கைத்தொழில், வாணிகம் முதலான வற்றிலும் மிகச் சிறந்து விளங்குவதும் நம் நாடே. ஆன்மஞானத்தை உலகத்திற்கே ஊட்டும் புத்தர், வர்த்தமான மகாவீரர், சங்கரர், மத்வர், இராமநுஜர் ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர், தாயுமானவர், நாயன்மார்கள், ஆழ்வார்கள், கபீர்தாஸர், துளஸிதாஸர் போன்ற அரிய மகான்களை ஈன்ற புண்ணிய நாடும் இதுவே. திருவள்ளுவர், கம்பர், காளிதாஸர் போன்ற சிறந்த கவிகளைப் பெற்று வளர்த்த பேறு பெற்றதும் இந்த நல்ல நாடே.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே"

என்னும்ஆன்றோர்மொழி அருமை பெருமை வாய்ந்தது.

2. இந்நாட்டின் எழிலையும் செல்வத்தையும் கண்ணுற்று அந்நியர் பலர்கைப்பற்றி ஆட்சிபுரிய மேவினர். அவர்களுள் இறுதியாக வந்தவர் ஆங்கிலேயர். ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியா ஏறக்குறைய இருநூறு ஆண்டுகள் இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சியால்அடைந்த நன்மைகள் பல உளவேனும் தீமைகள் இல்லாமல்

இல்லை. ஆங்கிலேயர் இந்தியர்களின் கைத்தொழிலை ஒடுக்கி, யாவற்றிற்கும் மேனாட்டையே எதிர்நோக்கி நிற்குமாறு செய்துவிட்டனர். இந்தியாவில் மூலப் பொருள்கள் கிடைத்தும் அவற்றைக்கொண்டு இந்நாட்டிலேயே வேண்டும் பொருள்களைச் செய்துகொள்ள விடாமல் மூலப்பொருள்களைக் கொண்டு, தேவைப்படும் பொருள்களை ஆக்கி, இந்நாட்டில் கொண்டுவந்து விற்றனர். ஆடைக்கும் அவர்களையே எதிர்நோக்கி நிற்கும் நிலை ஏற்பட்டது. ஆங்கிலக் கல்வி பரவியதில் ஒருசில நன்மைகள் விளைந்தனவேனும் மக்கள் மனம் மாறி, மேனாட்டு நாகரிகத்தில் மூழ்கினர். ஜனத்தொகை பெருகியும் வேளாண்மைக்குரிய நெறிகள் விருத்தியாக்கப்படவில்லை. இவற்றை எல்லாம் உணர்ந்த ஆன்றோர் இந்தியாவை ஆங்கிலேயரிடமிருந்து விடுவிக்க எண்ணினர். அதன் காரணமாகத் தோன்றியதுதான் காங்கிரஸ் மகா சபை.

3. காங்கிரஸ் மகாசபையில் இந்தியாவில் இருந்த சான்றோர் பலர் சேர்ந்து உழைக்கலாயினர். அன்னார், அடிமைப்பட்டுக் கிடக்கும் நாட்டுமக்களுக்கு உணர்ச்சியூட்டினர்; ஆங்கில அரசாங்கத்தாரை இந்தியாவிற்குச் சுதந்தரம் அளிக்குமாறு பலவாறு நெருக்கினர். அதற்காக அடிபட்டும், சிறைபட்டும், பொருளிழந்தும் உயிரிழந்தும் துன்பமுற்றனர். அப்போராட்டத்தை இறுதியாக நடத்தி வெற்றிபெற்றவர் மகாத்மா காந்தியடிகள் ஆவர். அவருக்கு உறுதுணையாய் நின்று, இன்பதுன்பங்களைத் தாங்கி நின்றோர் பலர். அவர்களுள் பண்டித ஜவாஹர்லால் நெஹ்ரு, ஸர்தார் வல்லபபாய் படேல், ஸ்ரீ ராஜேந்திர பிரசாத், ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் என்பார் மிகவும் முக்கியமானவர்கள்.

4. 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி இந்தியா அந்நியராட்சியினின்று விடுதலைபெற்றுச் சுதந்தரம் பெற்றது. இத்தகைய சுதந்தரத்தை இதற்கு முன் எந்த நாடும் இம்முறையில் பெற்றதில்லை. கத்தி இன்றி, இரத்தம் இன்றிச் சாத்துவிகப் பெரும்போர் நடத்தி இந்தியர் தம் பண்பாட்டினுல் பெற்ற சுதந்தர மாகும். ஆங்கிலேயர் ஒன்றும் செய்தற்கு இயலாதவராய்த் தாமே சுதந்தரத்தை வலியக்கொடுத்துச் செல்ல வேண்டியதாயிற்று. மகாத்மா காந்தியடிகளின் ஆத்ம சக்தியும், உண்மையும், நேர்மையும், சீலமும், உறுதியும், நிதானமும் அறிந்துத ஆங்கிலேயர் சுதந்தரத்தை அளித்துச் செல்லவேண்டிய நிலையை உண்டாக்கியது. காந்தியடிகள் தம் நாட்டிற்காக உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்த உத்தமர். அவரை இந்திய மக்கள் என்றும் மறவார் என்பது உறுதி.

5. புதிதாக உரிமை பெற்ற இந்தியா நாட்டில் தோன்றிய இடையூறுகள் பலப்பல. இன்னல் பல. அவற்றுல் மக்களுக்கு உண்டாகிய துன்பங்களும் துயரங்களும் பலப்பல. பொருள் முட்டுப்பாடு ஒருபுறம், வேலையில்லாத் திண்டாட்டம் ஒருபுறம். இவ்வாருக இன்னலுற்ற இந்தியாவை இவற்றையெல்லாம் சீர் ஆக்கித் தாங்கிநிற்குமாறு செய்ய, அறிவுத்திறனும், கூர்த்த மதியும், ஓயாத உழைப்புமுள்ள நேரு, படேல், ராஜாஜி பிரசாத் என்பார், நடுக்கடலில் புயற்காற்றுல் அலைப்புண்டு அலமரும் மரக்கலத்தைத் தீமை ஒன்றின்றி நடத்திச் செல்லும் மாலுமி போன்று, அரசியல் நடத்துவாராயினர்.

6. நேரு சுதந்தர இந்தியாவின் முதல் அமைச்சர் ஆனார். இவர் அறிவுத்திறன், சொல்வன்மை, ஓயா உழைப்பு முதலான பண்புகளைப் பெற்றவர். இவருடைய ஆட்சிச் சிறப்பால் இந்தியா பலவித இடையூறும் தாங்கி நின்று கடந்து, மேனாட்டாரும் வியக்க, முன்னேறிக்கொண்டு வருகிறது. இவருடைய உழைப்பு இந்தியாவிற்குமட்டுமன்றி ஆசிய நாட்டிற்கே நலம் பல விளைக்கின்றது. வேற்று நாட்டார்களும் இவரைப் போற்றி மதிக்கின்றனர். இவர் காந்தியடிகளின் கொள்கைகளைப் பின்பற்றியவராய், உலக சமாதானத்திற்கே வழி வகுப்பவராய், உலகத்திற்கே தவப்புதல்வராய், விளங்குகிறார். இவருடைய அரசியல் நிர்வாகத்தினால் இந்தியா பல்லாற்றானும் முன்னேறி உலகிற்கே வழிகாட்டியாக விளங்குகிறது. இவர். "காந்தியடிகள் நமக்கு அளித்துள்ள சத்தியம், நேர்மை, அஹிம்சை என்ற ஆயுதங்களைத் துணையாகக் கொண்டு ஒழுகுவோமாயின், இந்திய நன்னாடு கல்வி, கலை, நாகரிகம், கைத்தொழில், பொருள்வளம் அரசியல் என்பனவற்றில் முன்னேறி இமயச் சிகரம்போல் உயர்ந்து விளங்கும். மற்றும், உலகிற்கே வழிகாட்டியாக விளங்கும்." என்று கூறி நாட்டினை முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்கின்றார். இவர் நீடு வாழ்க!

7. மலை கலங்கினும் மனங்கலங்காத பெரு வீரர் ஸர்தார் வல்லப பாய் படேல். இவரை 'இரும்பு மனிதர்' என்றும் கூறுவர். தகுதிக்கேற்ற பெருமை வாய்ந்தவர் இவர். உறுதியும், அஞ்சா நெஞ்சமும், தீர ஆயும் திறனும், செயலாற்றும் வன்மையும் ஒருங்கே படைத்தவீரர் வல்லபபாய் உள் நாட்டு மந்திரியாய்ப் புரிந்த தொண்டு

பிறர் எவரும் செய்ய முடியாததாய், வியக்கும் தன்மை வாய்ந்ததாகும். இரட்டை ஆட்சியை மேற்கொண்ட ஆங்கிலேயரின் ஆட்சியில் இந்தியா பல வேறு சிறு சிறு சமஸ்தானங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அச்சமஸ்தானாதிபதிகள் ஒற்றுமையின்றி வாழ்ந்தது ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் வேரூன்றி நிற்கக் காரணமாயிற்று. ஸர்தார் வல்லபபாய் படேல் அதனை நன்கு உணர்ந்து சிதறுண்டு கிடந்த ஐந்நூற்றறுபது சமஸ்தானங்களை ஒன்றுபடுத்தி இந்தியக் குடியரசுடன் சேர்த்தார். இச் செயல் பிறர் எவரும் செய்ய முடியாது செயற்கரும் செயல் அன்றோ! புதிய பாரதப் படைப்பின் தலைவரான பிரமன் வல்லபபாய் படேல் ஆவர். இவர் தீநெறிச் செல்வோரையும் நாட்டின் நலனை அழிப்பவர்களையும் இரக்கமின்றிக்கண்டித்து ஒடுக்கும் ஆற்றல் வாய்ந்தவர். சுதந்தரம் பெற்ற நாள் முதல் இந்தியா அடைந்த இன்னல்களை நீக்கிக் காத்த பெருமை இவர்க்கு உண்டு. அதனாலன்றோ இவர்க்கு 'ஸர்தார்' என்ற பட்டமும் முன்னரே அளிக்கப்பட்டது.

8. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் கடைசிக் கவர்னர் ஜனரல் ஆக விளங்கியவர். இவரை மக்கள் 'ராஜாஜி' என்று அழைப்பர். இவர் நுண்மதி வாய்ந்தவர். இவர் ஆட்சி முறையிலும் நாட்டு நிலைக்கு ஏற்றவாறு காரியங்களைச் செய்து நாட்டையும் மக்களையும் முன்னேற்றுவதிலும் திறமை வாய்ந்தவர். இவரைக் கலக்காமல் காந்தி, படேல், நேரு என்பவர் ஒரு காரியமும் செய்யார் என்றால், இவர் திறனையும் நுண்ணறிவையும் என் என்று கூறுவது?

9. இராஜேந்திர பிரசாத் இந்தியாவின் ஜன நாயக ஆட்சித் தலைவர். இவர் பொறுமையும், செயல் திறனும், அறிவு மேம்பாடும், யாவரோடும் அன்பு பொங்கக் கலந்து பழகும் பண்பாடும், சமநிலை மனப் பான்மையும், படைத்தவர். இவற்றாலன்றோ இவர் இரண்டாம் முறையும் ஜன நாயக ஆட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார். இந் நால்வரில் ஸர்தார் படேல் இவ் வுலக வாழ்வை விட்டகன்றார். மற்றை மூவரும் இந் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டுவருகின்றனர். இவர்களுக்குக் காந்தியடிகளின் ஆத்மசக்தி வழிகாட்டிச் செல்கின்றது. இவர்களுடைய தலைமையில் நாடு பல வகையிலும் முன்னேற்றமுற்று விளங்கும் என்பது ஒருதலை. இந்தியா மக்களாகிய நாம் இவர்கள் கூறும் மொழிகளின்படி நடந்து, இவர்களுக்குத் துணையாய் நின்று, நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடு படுவோ மாக.

## அருஞ்சொற்களும் பொருளும்

எழில் – அழகு
ஆன்மஞானம் – தத்துவ அறிவு
அர்ப்பணம் – அளித்தல்
மாலுமி – கப்பலோட்டி
சிகரம் – மலையுச்சி
சாத்விகம் – அமைதியான குணம்
சீலம் – ஒழுக்கம்
கூர்த்த – கூர்மையான
இடையூறு – நடுவில் வரும் துன்பம்
சமஸ்தானாதிபதிகள் – சிறு அரசர்கள்

## சிறுவிடை வினாக்கள்

1. பாரதநாட்டின் பெருமைகளை விளக்கு.
2. அரிய மகான்கள் சிலர் பெயரைக் கூறு.

3. எவை மனி சிறந்தன ? எவற்றினும் ?
4. இந்தியா ஆங்கிலேய ஆட்சியில் அடைந்த குறைபாடு என்ன ?
5. காங்கிரஸ் சபை ஏன் தோன்றியது ? செய்தது என்ன?
6. நாட்டு விடுதலைக்கு உழைத்தோர் யாவர் ? இவரைக் கூறு.
7. காந்தியடிகள் செய்த தாய்நாட்டுத் தொண்டு யாது ? சிறப்பு யாது ?
8. 'நடுக்கடலில் புயல்காற்றால் அலைப்புண்டு அலமரும் மரக்கலத்தைத் தீமை ஒன்றின்றி நடத்தி செல்லும் மாலுமி போன்று' – சந்தர்ப்பம் தந்து விளக்கு.
9. நேருவின் தொண்டினையும் சிறப்பியல்களையும் விளக்கு.
10. இரும்பு மனிதர் யார் ? எத்தகையார் ? செய்த அருஞ் செயல் யாது ? பெற்ற பட்டம் யாது ?
11. இராஜாஜி யார் ? அவரைப்பற்றி என்ன அறிகிறாய் ?
12. இராஜேந்திர பிரஸாத் என்பவரைப்பற்றி அறிவ தென்ன ?

## கட்டுரை வினாக்கள்

கீழ்வரும் தலைப்பு அமைத்துக் கட்டுரை எழுது :

1. இந்தியா சுதந்தரம் பெற்றது.
2. காந்தி, நேரு, படேல், ராஜாஜி, பிரஸாத். (தனித் தனி யாக)
3. ஆங்கில ஆட்சியால் இந்தியாவிற்கு உண்டான நன்மை தீமைகள்.

## இலக்கணம்

ல, ள, ற, ர, ன, ந, ண, ழ, ய என்னும் எழுத்துக்கள் உச்சரித்துப் பழகுதற்கு உரியன. இவை வந்துள்ள பல சொற்களைப் பயின்று பழகுக.

ஒவ்வோர் எழுத்தும் வருமாறு ஒவ்வொன்றிற்கும் ஐந்து ஐந்து வார்த்தைகள் எழுது.

உயிர், மெய், உயிர்மெய் எழுத்துக்களை எழுது.

**உயிர் - 12.** *குறில் - 5. அ, இ, உ, எ, ஒ.*
*நெடில் - 7. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ.*

**மெய் - 18.** வல்லினம் - 6. க், ச், ட், த், ப், ற்.
மெல்லினம் - 6. ங், ஞ், ண், ந், ம் ன்.
இடையினம் - 6. ய், ர், ல், வ், ழ், ள்.

**உயிர்மெய் - 216.** க் + ஆ = கா.
*இதேபோன்று பதினெட்டு மெய்ம்மீதும் பன்னி ரண்டு உயிரும் தனித்தனி ஏற உயிர்மெய் 216.*

**ஆய்தம் - 1.** ஃ

**பயிற்சி**

1. *உயிர் எழுத்து எத்தனை? பிரிவுகளை எழுது.*
2. *மெய் எழுத்து எத்தனை? பிரிவுகளை எழுது.*
3. *உயிர்மெய் எழுத்து எத்தனை? எப்படி?*
4. *ஆய்த எழுத்து எத்தனை? வடிவம் என்ன?*

# 3. காவிரி யாறு

'ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்' என்பர். ஒரு நாடு வளம் பெறுவதற்கு அந்நாட்டின்கண் உள்ள ஆறுகளே காரணமாகும்.

"இருபுனலும் வாய்ந்த மலையும் வரு புனலும்
வல் அரணும் நாட்டிற்கு உறுப்பு"

என்றார் திருவள்ளுவர். அதனில் 'வருபுனல்' என்றது மலையில் உற்பத்தியாகும் ஆற்றினையே குறிப்பதாகும். இந்தியா என்னும் நம் நாட்டில் கங்கை, சிந்து, பிரமபுத்திரா, யமுனை, மகாநதி, தபதி, நர்மதை, கோதாவிரி, கிருஷ்ணை, வடபெண்ணை, தென்பெண்ணை, பாலாறு, காவிரி, வையை, தாம்பிரபரணி முதலான பேராறுகள் ஓடுகின்றன. இவையே அன்றிப் பல சிற்றாறுகளும் உண்டு.

2. காவிரியாறு என்பது மேற்குத் தொடர்ச்சி மலையில் குடகு நாட்டில் உற்பத்தியாகிறது. அது பிறக்கும் இடத்திற்குத் தலைக்காவிரி என்று பெயர். காவிரியாறு மலை நாட்டின் வழியாகவே ஓடி, மைசூர் ராஜ்யத்தையும் கடந்து, சேலம், கோயம்புத்தூர், திருச்சி தஞ்சை ஜில்லாக்களில் பாய்ந்து கடலோடு கலக்கிறது. அது சேலம் கோயம்புத்தூர் ஜில்லாக்களுக்கு எல்லையாக அமைந்துள்ளது. காவிரியாறு ஐந்நூறு மைல் நீளம் உடையது. காவிரியாறு வற்றாத ஜீவநதி. கோடைக் காலத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்யும்

மழையாலும், ஆறு ஓடி வரும் பகுதியில் மழைக் காலத்தில் பெய்யும் மழையாலும் எக் காலத்திலும் நீர் நிறைந்ததாக வுள்ளது காவிரியாறு. அதனுல்,

‘ வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத் தலைஇய கடற் காவிரி ’

என்று போற்றிக் கூறுவாராயினர். ‘பொன்னி என்னும் பொய்யாக் குலக்கொடி ’ என்றும் புகழ்ந்து கூறுவர். சோழ நாட்டின் செவிலித்தாய் என நாவாரக் கூறுவர். காவிரியின் நீர் வளத்தால் வளம் சுரந்து விளங்கும் சோழநாட்டை நீர் நாடு, பொன்னிநாடு, காவிரி நாடு என்றெல்லாம் கூறுவர். கங்கை நாட்டைக் கூற வந்த கம்பர். ‘காவிரி, நாடன்ன கழனி நாடு’ என்று கூறுவாரானுர். தொண்டரடிப் பொடி யாழ்வார் என்ற பெரியார், ‘கங்கையிற் புனிதமாய காவிரி,’ என்று தம் புனித வாயால் புகழ்ந்து கூறியுள்ளார்.

3. இக்காவிரி நதிக்கு ஹேமவதி, பவானி, நொய்யல், அமராவதி என்னும் ஆறுகள் கிளை நதிகளாக அமைந்துள்ளன. அக் கிளைநதிகளும் நீர் நிறைந்தோடும் ஆறுகளே. இவற்றுள் அமராவதியை ஆன் பொருநை என்று அழைப்பதும் உண்டு. அமராவதி நதிக் கரையில் அமைந்த கரூர் வஞ்சி என்னும் மறு பெயர் உடையது. அவ்வூர் சேரமன்னர்களில் ஒரு கிளையினருக்குத் தலைநகராக இலங்கியது. குடகு நாட்டிலிருந்து புறப்பட்டுவரும் காவிரியாறு தமிழகத்தில் புகுங்கால், புகுமிடத்திலிருந்தே கரையின் இரு மருங்கிலும் கிராமங்கள் பலவற்றையும் கொண்டது. மற்றும், காவிரி

யின் இரு கரையிலும் சைவ வைணவத் தலங்களையும் காணலாம். மக்களிடம் தெய்வ பக்தியும் ஒழுக்கமும் நிரம்பி யிருத்தற்குக் காரணம் ஆற்றின் நீரொழுக்கே ஆகும் எனின் குற்றமின்று. விண்முட்டும் கோயில்களின் கோபுரங்களைக் காவிரியின் இருகரையிலும் காணுங்கால் தெய்வ நம்பிக்கை இல்லாதவர்க்கும் அக்காட்சி இன்பம் பயக்கும். காவிரியைத் தெய்வப் பொன்னி என வாயார வாழ்த்தத் தோன்றும். காவிரியில் நீராடிக் கடவுள் பூசை புரியும் எண்ணம் தோன்றும். இருகரை மருங்கிலுமுள்ள சோலைகளும், தோப்புக்களும், பசுமை படர்ந்த பழனங்களும் அளவிலா இயற்கைக் காட்சியை அளித்துக் கண்களையும் உள்ளத்தையும் மகிழ்விக்கும். பூவிரி சோலைகளையும், பொழில்களையும், தோப்புக்களையும், கழனிகளையும் ஊடுருவிப் பெருக்கிக் கொண்டே பாய்ந்தோடுதலால் போலும் காவிரி என்று பெயர் வந்ததோ, என்று எண்ணவும் இடமுண்டு. கா + விரி— சோலைகளை விரித்துக்கொண்டு செல்வது.

4. காவிரி விவசாயத்திற்கு மிகவும் பயன் படுகிறது. காவிரி சிவ சமுத்திரம் என்னும் இடத்தில் உயரத்திலிருந்து கீழே விழுகிறது. அதனைச் சிவசமுத்திர நீர் வீழ்ச்சி என்பர். அந் நீர்வீழ்ச்சியினின்றும் மின்சாரம் எடுக்கப் படுகிறது. அந்த மின்சாரம் மைசூர் சமஸ்தானத்தில் பயன்படுத்தப்படுகிறது. காவிரியாற்றின் நீர் வீணாகக் கடலில் சென்று கலவாதபடி, பல அணைக்கட்டுக்கள் உள்ளன. வடக்கே ஹேமாவதியும் தெற்கே இலட்சுமண தீர்த்தமும் கலக்குமிடத்தில் கிருஷ்ணராஜ சாகரம் என்ற அணைக்கட்டு அமைந்துள்ளது. அங்குக் கடல்போல் நீர் தேங்கி இயற்கை வசதிகள் மிகுந்து

காணப்படுகிறது. அணையின்முன்னே ஒரு புறத்தில் காவிரியன்னையின் சிலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அச்சிலை தன் கைகளால் காவிரி நீரை அள்ளி மக்களுக்கு வழங்குவதுபோல அமைந்துள்ளது. நீர்த் தேக்கத்தி லுள்ள நீர் அணையை ஊடுருவிக் கொண்டு காவிரியன்னை யின் கைகளிலிருந்து எப்பொழுதும் பெருகிக் கொண் டிருப்பதுபோல் அமைக்கப்பட்டுள்ளது. இதனைக் கண்ணம்பாடி அணைக்கட்டு என்பர்.

5. மேட்டூருக்கு அருகில் காவிரியாறு இருமலை களுக்கு இடையில் பள்ளத்தாக்கின் வழிபாகப் பாய்ந் தோடி வருகிறது. இருபக்கங்களிலுமுள்ள மலைகள் காவிரிக்கு அமைக்கப்பட்ட கரைகள் போல் காட்சி யளிக்கின்றன. அங்குள்ள நிலப்பகுதியும் மிக்க ஆழ முடையதாக உள்ளது. இரண்டு மலைகளும் ஓரிடத்தில் ஒன்றை ஒன்று நெருங்குவனபோல அமைந்துள்ளன. அங்கு ஓர் அணையை அமைத்துப் பெரிய நீர்த் தேக்கம் உண்டாக்கினால், காவிரியின் நீர் கடலில் வீணில் சென்று கலவாமலும் வெள்ளம் மிக்க காலத்தில் நிலப்பகுதி கட்கு அழிவு நேராமலும் காக்கலாமன்றோ! அதனால் சோழ நாட்டின் வேளாண்மைத் தொழிலும் விருத்தி யடையும். இவற்றையெல்லாம் கருதி மேட்டூர் அணை அமைக்கப் பட்டுள்ளது. இவ்வணை உலகப் புகழ்பெற்ற பேரணைகளுள் ஒன்றாகும்.

6. காவிரிக்கு முதன் முதலில் கரை யமைத்து அணை கட்டியவன் சோழன் கரிகாலன் என்னும் மன்னன் ஆவான். காவிரி யாற்றினைக் கண்ணும் கருத் துமாய்ப் போற்றி நீர் வளம் பெருக்கி வந்தனர் சோழ

மன்னர்கள். காவிரியிலிருந்து பிரிந்து செல்லும் பல ஆறுகள் உண்டு. அவை வாய்க்கால்களே. அவற்றின் மூலமாகச் சோழ நாட்டின் எல்லாப் பாகங்களுக்கும் நீர் கொண்டு செல்லப்படுகிறது. காவிரியிலிருந்து பிரியும் நதி கொள்ளிடம் என்பதாகும். கல்லணை என்பது சோழநாட்டிற்கு அச்சாணி என்று கூறலாம். இதிலி ருந்து தான் காவிரியின் நீர் கொள்ளிடத்திற்குத் திருப் பப்படுகிறது. இக்கல்லணை 1600 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதாகும்.

7. காவிரியாறு கடலோடு கலக்குமிடமாகிய சங்க முகத்தில் சரித்திரப் புகழ் வாய்ந்த பூம் புகார் என்னும் காவிரிப்பூம் பட்டினம் சோழர் காலத்தில் சிறப்புப் பெற்று விளங்கியது. இளங்கோவடிகள் எழுதிய சிலப் பதிகாரத்தின் கதாநாயகன் நாயகிகளான கோவலனும் கண்ணகியும் பிறந்த ஊர் அதுவே. அந்நகரின் சிறப் பைத் தமிழ் நூல்கள் விதந்து கூறும். அந்நகர் சங்க காலத்துச் சோழ மன்னர்களுக்குத் தலைநகரமாகவும் துறைமுகப் பட்டினமாகவும் சிறந்து விளங்கியது. சோழர்களைப் பாடிய புலவர்கள் அனைவரும் காவிரியின் சிறப்பையும் பாடியுள்ளனர். 'சோழநாடு சோறு டைத்து' என்ற பழமொழிக்குக் காரணமாகியது காவலர் போற்றும் காவிரியாறே.

### அருஞ்சொற்களும் பொருளும்

இருபுனல் - மேல்நீர், கீழ்நீர்
வருபுனல் - ஆறு
வல்அரண் - வலியகோட்டை
செவிலித்தாய் - வளர்ப்புத்தாய்
வான் - மழை
உற்பத்தி - தோன்றுதல்

| | |
|---|---|
| மலைத்தலைஇய - மலையினை முதல் இடமாகக்கொண்ட | ஊடுருவி - நடுவிற் பாய்ந்து |
| | உபநதி - வந்து கலக்கும் ஆறு |
| | கிளைநதி-பிரிந்து செல்லும் ஆறு |

## சிறுவிடை வினாக்கள்

1. நம் நாட்டில் ஓடும் ஆறுகளில் சில கூறு.
2. காவிரி எங்கு உற்பத்தியாகிறது?
3. காவிரி எந்த எந்த ஜில்லாக்களின் வழியாகச் செல்கிறது?
4. காவிரியின் சிறப்பை எவ்வாறு கூறுகின்றனர்?
5. காவிரியின் உபநதியும் கிளை நதியும் கூறு.
6. காவிரியின் இருபக்கங்களிலுமுள்ள நிலத்தின் செழுமைபற்றி எழுது.
7. சிவசமுத்திரம், கண்ணம்பாடி அணைக்கட்டு, மேட்டூர் அணைக்கட்டு என்பனபற்றி எழுது.
8. கரிகாலன் காவிரிக்குச் செய்ததென்ன?
9. காவிரிப்பூம்பட்டினம் எங்கு உள்ளது? அதன் மறு பெயர் யாது?
10. கோவலன் கண்ணகி வரலாற்றைக் கூறும் நூல் எது? யார் எழுதியது?

## கட்டுரைப் பயிற்சி

தலைப்பளித்துக் கட்டுரை எழுது:—

1. ஆறுகளால் உண்டாகும் நலன்கள்.
2. நீர் வீழ்ச்சியினால் உண்டாகும் நன்மை.
3. அணைக்கட்டுகளும் அவற்றின் பயனும்.

## இலக்கணம்

| | | |
|---|---|---|
| 1. அலை, அளை, அழை | 2. புரம் - புறம் | 3. மன் - மண் |
| கிலி, கிளி, கிழி | அரம் - அறம் | பொன் - பெண் |
| வலி, வளி, வழி | மரம் - மறம் | தின் - திண் |

மேற்கூறியவற்றை உச்சரித்துப் பார். அவைபோல் வகைக்கு மூன்று மூன்று உதாரணங்கள் எழுது.

## பயிற்சி

1. மாலை கட்டுதல் எனது வேலை.
2. கையிளிருந்து கடிகாரம் விளுந்தது.
3. மயை வியாயக்கியமை பெய்தது.
4. கியவி வயுக்கி விட்டுக் கியே விளுந்தாள்.

மேலுள்ள வாக்கியங்களிலுள்ள பிழைகளைத் திருத்தி எழுது.



மேட்டூர் அணையின் தோற்றம்

# 4. அச்சுத் தொழில்

1. நாம் இக்காலத்தில் பல புத்தகங்களைப் படிக்கிறோம்; பலவகைப் பத்திரிகைகளைப் பார்க்கிறோம்; சிலவற்றைப் படிக்கிறோம். நூல்நிலையத்திற்குச் சென்றால் அங்கு ஏராளமான புத்தகங்கள் இருக்கின்றன. நம் கல்வி அறிவு பெருகுவதற்குப் புத்தகங்கள் காரணமாயிருக்கின்றன. நாம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட நூல்களையும் இன்று படித்து மகிழ்கிறோம். இவ்வாறெல்லாம் ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்கள் அனுபவித்திருக்க முடியாது. இக்காலத்தில் காகிதம் செய்தலும் அச்சடித்தலும் ஆகிய இரு தொழில்களும் முன்னேற்றம் அடைந்துள்ளன. அவற்றின் உதவியால் நாம் மிக விரைவில் பல நூல்களைப் படித்து முன்னேற்றம் அடைகிறோம். சற்றுக் கூர்ந்து கவனித்தால் நம் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியமான கல்வி, பரவுதற்கு அச்சுத் தொழில் பேருதவி புரிகிறது என்பதை உணரலாம்.

2. முன் காலத்தில் முன்னோர்கள் நூல்களைப் பனையோலையில் எழுதினர். பனையோலையை ஒழுங்குறச் சீவி வைத்துக் கொண்டு எழுத்தாணி கொண்டு எழுதிவந்தனர். பெரிய நூல்களை எழுத்தாணி கொண்டு ஓலையில் எழுதுவது என்பது எளிதான காரியமாகுமா? அவ்வாறு எழுதிப் படிப்பதென்றால் எவ்வளவு காலம் பிடிக்கும்? ஒருவரிடத்தில் இப்பொழுது

வைத்திருப்பது போல் பல புத்தகங்களை வைத்திருக்க முடியுமா? அக்காலத்தில் இப்பொழுது நூல் நிலையம்



பேப்பர் வாசித்தல்

வைத்திருப்பதுபோல் பல நூல்களைக் கொண்ட நூல் நிலையங்கள் இருக்க முடியுமா? ஒருவர் ஒரு பெரிய நூலை எழுதி வைத்துக்கொள்வதற்கு நீண்ட காலமும் பெருஞ் செலவும் செய்திருக்க வேண்டும். அந்த நூலை அவர் பிறருக்குக் கொடுத்து உதவுவாரோ? எனவே, பல வகையாலும் நூல்கள் பரவாதிருந்தன. மற்றும் ஒருவன் பல நூல்களையும் கற்றுணரவும் இயலாது. அதனால் கற்றவரும் சிலரே யாவர்.

3. இக்காலத்தில் எழுதுவதற்கு ஏற்ற சாதனங்கள் பல உள்ளன. காகிதம் குறைந்த விலையில் கிடைக்கிறது. மை, பேனா முதலான சாதனங்களும் உள்ளன. பல புத்தம் புதிய கருத்துக்களை வெளியிடுவதற்கு வசதி இருக்கிறது. அரியவும் புதியவுமான கருத்துக்களை எழுதிப் புத்தகங்களாக்கி நாடெங்கும் பரப்பலாம். நம் கருத்துக்களை உடனுக்குடன் பிறர் அறியுமாறு

செய்யலாம். அறிவு வளர்ச்சிக்கும், நாகரிக வளர்ச்சிக்கும் புத்தகங்கள் உறுதுணையாகின்றன. நாம் பலவகையான கல்விகளைக் கற்றுணரவும் புத்தகங்கள் துணை செய்கின்றன. எதனைப் பற்றியும் விரித்து எழுதிப் புத்தகங்களாக்கி நமக்கும் பிறர்க்கும் பயன்படுமாறு செய்யலாம். இவற்றிற்கெல்லாம் ஆதாரமாக இருப்பது காகிதம் செய்தலும் அச்சுத் தொழில் முன்னேறி யிருத்தலுமே ஆகும். முன் காலத்தில் ஒரு நூல் எழுதி முடிக்கப் பெருஞ் செலவாகும். ஆனால் குறைந்த விலையில் நாம் இக்காலத்தில் புத்தகங்களைப் பெறுகிறோம்.

4. அச்சுத் தொழிலை முதன் முதல் கண்டுபிடித்தவர்கள் சினர்களே. கி. பி. ஆறும் நாற்றுண்டில் சீனர் அச்சு வித்தையைக் கண்டு பிடித்தனர். அவர்கள் மரப் பலகைகளில் பக்கம் பக்கமாகத் தாம் எழுத வேண்டியவற்றைச் செதுக்கி அச்சடித்தனர். அப் பலகைகள் அந்தப் புத்தகத்தில் ஒவ்வொரு பக்கத்திற்குத்தான் பயன்படும். இவ்வாறு செய்வதற்குப் பொருட் செலவும் கால நீட்டிப்பும் ஆகும். ஆதலால் காலத்தையும் விணுக்காமல் பொருட் செலவும் அதிகமாகாமல், பின்னும் பின்னும் பயன்படுத்துவதற்கு ஏற்ற வழி ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டுவது அவசியமாயிற்று.

5 ஜான் கூடன் பெர்க்கு என்பவர் ஒரு ஜெர்மானியர். அவர் ரயின் நதிக்கரையிலுள்ள மேயென்ஸ் நகரில் பிறந்தவர். அவர் பல காரணங்களால் தம் நாட்டைவிட்டு ஹாலெண்டு தேசத்தில் ஹான்லம் நகருக்கு வந்தார். அங்கு அவருடைய நண்பர் ஒருவர் மரப் பல

கையில் செதுக்கப் பட்டிருந்த லத்தீன் இலக்கணத்தைக் காண்பித்தார். அன்று முதல் ஜான் கூடன் பெர்க்குக்கு அச்சு அடிக்கும்முறையைக் கண்டு பிடிக்க வேண்டும் என்றஅவா உண்டாயிற்று. அவர் நெடுங்காலம் சிந்தித்து மரத்துண்டில் ஒவ்வோர் எழுத்தையும் தனித்தனியே செய்து வைத்துக் கொண்டு, வேண்டியபடி சொல்லுக்குப் பொருந்தக் கோத்து அச்சிடும் முறையைக் கண்டறிந்தார். அவர் கருதிய படியே அச்சடிப்பது மனத்திற்குத் திருப்தியையும் மகிழ்ச்சியையும் அளித்தது. அவர் தாம் கருதியவாறு மரத்துண்டில் தனித்தனியே எழுத்துக்களைச் செதுக்கிக் கொண்டு, பின் சொல்லுக்கும் வாக்கியத்திற்கும் ஏற்ப அடுக்கிய விவிலிய நூல், கிறிஸ்தவ மத சம்பந்தமான நூல்கள் எல்லாவற்றையும்வெளியிட்டார்.

6. ஜான் கூடன் பெர்க்கு ஓர் அச்சகத்தை ஏற்படுத்தினர். அங்கு அவர் தனக்குத் துணையாக ஒரு வேலையாளைச் சேர்த்துக் கொண்டார். அவன் அவரோடு வேலை செய்து சில காலத்தில் அச்சுத் தொழிலைக் கற்றுக்கொண்டான். அவன் ஜான் கூடன் பெர்க்குக்குத் தெரியாமல் சென்று வேற்றூரை அடைந்தான். அங்கு அவன் இருவரைத் துணையாகக் கொண்டு ஓர் அச்சகத்தை ஏற்படுத்தினன், அம்மூவரில் ஒருவன் மரத்தால் எழுத்துக்களைத் தனித்தனியே செதுக்குதலை விட, ஈயத்தில் எழுத்துக்களைத் தனித்தனியே வார்ப்பதைக் கண்டறிந்தான். அதன் பின்னரே அச்சுத் தொழில் உலகில் பரவலாயிற்று.

7. கி. பி. 1475 ல் காகஸ்டன் என்பவர் வெஸ்டு மினிஸ்டரில் முதல் முதலாக அச்சகம்

அமைத்தார். அவரே முதன் முதல் அச்சுப் புத்த கங்களை வெளியிட்டார். அதன் பின்னர் அத்தொழில் வளர்ச்சி உற்றது. பல அரிய புத்தகங்கள் வெளி வந் தன. மிகப் பழமையான நூல்களெல்லாம் அழிந்து போகாமல் காக்கப் பட்டன. நூல்கள் பெருகின. அரிய கருத்துக்களை யாவருமறியச் செய்வது எளிதாயிற்று. அழுத்தி அச்சடித்தது முதல் நிலை. அதனைத்தான் **பிரஸ்** என்றனர். மனிதன் அறிவு வளர்வதல்லவா? பின்னர் காலால் மிதித்து அச்சடிப்பதான **டிரெடில்** என்ற கருவியைக் கண்டறிந்தனர். இப்போது மின்சா ரத்தால் அச்சடிக்கும் '**பவர் பிரஸ்**' கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இக் காலத்தில் இத் தொழில் சிறப்பாக வும், புதுமையாகவும், விரைவாகவும் முன்னேறி வருகி றது. பல்லாயிரக் கணக்கான பிரதிகள் ஒரு மணி நேரத் தில் அச்சடிக்கும் யந்திரங்கள் இக் காலத்தில் உள்ளன. அச்சுத் தொழிலுக்குச் சாதகமான யந்திரங்கள் பலவும் உள்ளன. அவற்றால் புத்தகங்கள் பெருகுகின்றன. கல் வியும் மக்கள் அறிவும் பெருகி வளரக் காரணம் உண்டு அல்லவா? நாகரிகமும் வளர்கிறது. பல் வேறு வகைச் செய்தித் தாள்களும் பெருகின. இவற்றால் மக்கள் பல் வகை நன்மைகளை அடைகின்றனர். அச்சுத்தொழில் அருங்கலைத் தொழிலாய் வளர்ந்து வருகிறது; அது மக் கள் அறிவு வளர்ச்சிக்குச் சிறந்த சாதனமாக வுள்ளது.

## அருஞ்சொற்களும் பொருளும்

| | |
|---|---|
| பத்திரிகை - செய்தித்தாள் | அச்சகம் - அச்சடிக்கும் இடம் |
| நூற்றாண்டு - நூறு வருடங்கள் | சாதகம் - உதவி |
| சாதனம் - கருவிகள் | பிரதிகள் - படிகள் |

அரியவும் - அருமையானவை
உறுதுணை - மிக்க உதவி
விவிலியநூல் - பைபிள்
எளிதாயிற்று - சுலபமாயிற்று

## சிறுவிடை வினாக்கள்

1. அச்சுத்தொழில் எதற்குப் பேருதவி புரிகிறது? எப்படி?
2. முன் காலத்தில் நம் முன்னோர் எவ்வாறு எழுதி வந்தனர்?
3. இக்காலத்தில் எழுதச் சாதனமாயுள்ளவை எவை?
4. புத்தகங்களினால் விளையும் நன்மை என்ன?
5. அச்சுத்தொழில் எங்கு எப்பொழுது தோன்றிற்று? எப்படி?
6. ஜான் கூடன் பர்க்கு பற்றி அறிவதென்ன?
7. அச்சுத்தொழில் விருத்தியடைந்த விதத்தை எழுது.
8. காக்ஸ்டன் என்பாரைப் பற்றி அறிவதென்ன?
9. அச்சு எந்திரங்களில் சிலவற்றைக் கூறு.
10. அச்சுத் தொழிலால் விளையும் நன்மைகளை எழுது.

## கட்டுரைப் பயிற்சி

1. முன் காலத்தில் புத்தகங்கள் எழுதிய முறை.
2. இக்காலத்தில் கல்வி வளர்ச்சிக்கு உரிய சாதனங்கள்.
3. அச்சுத் தொழிலால் விளைந்த நன்மைகள்.
4. அச்சுத் தொழில் நாட்டு முன்னேற்றத்திற்கு அவசியமானது.
5. 'காகிதமும் அச்சுத் தொழிலும்'

## இலக்கணம்

தமிழ் மொழியிலுள்ள எழுத்துக்களைப் பயின்றிருக்கிறீர்கள். அவற்றைத் திருத்தமாக உச்சரிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும். திருத்தமாக உச்சரிக்கத் தெரிந்தால்தான் பிழையின்றித் திருத்தமாக எழுத முடியும். திருத்தமாகப் பேசவும், திருத்த

மாகப் பிழை யின்றி எழுதவும் கற்பிப்பதே இலக்கணத்தின் நோக்கம் ஆகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கல் | கள் | வளி | அளி | அரை | அலை |
| முலை | முளை | அலி | புரம் | அறை | அளை |
| வலி | வழி | அழி | புறம் | அழை | அரம் |
| அறம் | குறவர் | குரவர் | கரை | கழை | கலை |
| கறை | களை | இரை | இளை | இலை | இறை |

மேலே உள்ள சொற்களைப் படியுங்கள். அவற்றின் பொருளையும் ஒலி பேதத்தையும் பொருள் வேற்றுமையையும் அறிந்து கொள்ளுங்கள்.

எழுத்துக்கள் பிறக்கும் முறையும் உச்சரிக்கப்படும் முறையும் உங்கள் இலக்கணப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளன. அதனைக் கவனித்துப் படியுங்கள்.

## பயிற்சி

1. நேற்றிரவு, புற்றரை, பழக்க வழக்கம், பலகாலம், பள்ளிப் பயிற்சி, பல்லி கூறுதல் இச் சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது.

2. மல்லர், மள்ளர் ; மலை, மழை ; செரு, செறு ; பலம் பழம் ; இவற்றின் வேற்றுமை என்ன ?

# 5. இளைஞர்கள் அறிவாராக

1. மாணவர்களே, நீங்கள் பள்ளியில் ஐந்து ஆறு வது வயது முதல் பயின்று வருகிறீர்கள். இரண்டாம் வகுப்பு முதல் ஆத்திசூடி, உலகநீதி, வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம் முதலான பல நீதி நூல்களைப்படித்துக்கொண்டு வருகிறீர்கள். அந்நூல் களின் பாடல்களை மனப்பாடம் செய்கிறீர்கள். அவற் றின் உரைகளையும் கருத்துக்களையும் நன்கு அறிவீர்கள். இவை போன்ற நீதிகள் பல தமிழ் மொழியில் உள்ளன. நாலடியார், திருக்குறள் முதலியன சிறந்த நீதி நூல் களே. இவற்றின் ஆசிரியர்கள் அனைவரும் பெரும் புகழ் வாய்ந்த புலவர்கள். அவர்கள் கல்வியிலும் உலகி யல் வாழ்க்கை அனுபவத்திலும் மிகவும் சிறந்தவர்கள். அத்தகையார், சிறுவர்களும் பெரியவர்களும் படித்துப் பயன் எய்துமாறு நீதி நூல்களை எழுதக் காரண மென்ன? நம் தமிழ்க் காவியங்களிலும் நீதிகள் பரக்கக் கூறப்பட்டுள்ளன.

2. மக்கள் இன்புற்று வாழ விரும்பினால் நீதிநெறி களில் நின்று ஒழுகவேண்டும். நன்னெறியில் ஊன்றி நின்று ஒழுகுதல் என்பது எளிதான காரியம் அன்று. மனம் தீயனவற்றில் விரைவில் சென்று பற்றுதல்போல நல்லனவற்றில் பற்றுவதில்லை. ஆதலால் மனத்தைச் செம்மையான நெறியைப் பற்றும்படி செய்யவேண்டு மானால் இளமை முதலே மனத்தைப் பழக்கவேண்டும். பழக்கம் நல்லனவாயின் நன்மை ஏற்படும்; தீயனவா

யின் தீமை ஏற்படும். எதனை மனம் அடிக்கடி நினைக்கின்றதோ அந்நெறியைப் பின்பற்றி நிற்பது மனத்திற்கு எளிதாகும். ஆதலால்தான் மனத்தை நல்லவழியில் இளமைமுதற் பழக்கஎண்ணி நீதிநூல்களை இயற்றியுள்ளனர். அவற்றைக் கற்றால்மட்டும் பயன்தரா; அவற்றில் கூறியுள்ளபடி நின்று ஒழுகினுல் நல்ல பயனைத் தரும். அதற்குப் பழக்கம்வேண்டும். அப்பழக்கம் இளமை முதலே அமையவேண்டும். அதற்கு மனம் அவற்றைப் படித்து அடிக்கடி சிந்திக்கவேண்டும்.

3. மனம் தூய்மையடையவேண்டும். களவு, பொய், கோபம், ஆசை, பொறாமை, வெறுப்பு, விருப்பு இவற்றை மனம் பற்றிநிற்கலாகாது. மாசற்ற பளிங்கு போல் துலங்கவேண்டும். யாவரிடத்தும் அன்பும், இரக்கமும், இன்சொல் பேசுதலும், புறங்கூறாமையும்; பிறர் மேம்பாடு கண்டு பொறாமைப்படாமல்மகிழ்தலும் பெற்று மனம் தெளிந்திருக்கவேண்டும். கள்ளங்கபடுகளை மனத்திற்கொண்டு எவ்வளவு அறம் முதலியன செய்தாலும் பயன் இல்லை. "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்" என்றார் திருவள்ளுவர். தனி மனிதர் வாழ்வு, பொதுவாழ்வு என்ற இருவகை வாழ்விலும், தூய மனமுடையவனாக இருக்கவேண்டும். உண்மை பேசுதலும், பொய் பேசாதிருத்தலும் மனத்தைத் தூய்மைப்படுத்துதற்குத் தக்க சாதனங்களாம். சத்தியமே கடவுள் என்று கூறும் ஆன்றோர் வாக்கினையும் மனத்தில் கொள்ளவேண்டும். காந்தியடிகளின் தூய்மைக்கும், மேன்மைக்கும் காரணம் அவர் சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டதுதான்.

4. பொருள் ஒவ்வொருவர் வாழ்க்கைக்கும் வேண்டுவதே. அதனால் பொருளைத்தேட வேண்டுவதும் கடமையே. பொருளைப் பிறர்க்கு வழங்குதல் இல்லாமல் தனக்கே வைத்துக் கொள்வதும் நல்லதன்று. தேவைக்குமேல், பொருளைத் தேட முயல்பவன் தீயன செய்தேனும் பொய்கூறல், வஞ்சித்தல் முதலியன செய்தேனும் தேடுவான். அதனால் பொருள்தரக்கூடிய மகிழ்ச்சியைக் காட்டிலும் துன்பமே அதிகமாகும். அவன் கடவுள் அருளும் பெறமுடியாதவனாகின்றான். பொருளைத் தேவையளவிற்குத் தேடிக்கொள்ளவேண்டும்; பிற்காலத்திற்கெனச் சிறிதளவு சேமித்து வைக்கவும் வேண்டும்; பொருளைக்கொண்டு பிறர்க்கும் நல்லன செய்தல்வேண்டும்.

5. ஒவ்வொருவரும் தன்னலம் மட்டும் கருதக் கூடாது. அதனால் தன்னை மறந்து பிறர் நலம் கருத வேண்டும் என்பதும் இல்லை. தன்னலமும் காக்க வேண்டும்; பிறர் நலத்தையும் பேணவேண்டும். பிற உயிர்களிடத்தில் அன்பில்லாதவர்கள் மக்களாகார். இளைஞர்கள் வாழ்க்கைக்குறிக்கோளை இளமை முதலே கடைப்பிடித் தொழுகவேண்டும். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை பயனற்றது. பிறரிடமுள்ள குறைபாட்டைக் காணவும் கூடாது; கூறவும் கூடாது. பிறரிடமுள்ள நிறைவைப் பின்பற்ற வேண்டும்; எடுத்துக்கூறவும் வேண்டும். ஒவ்வொருவரும் பிறரைத் திருத்துவதற்கு முன் தன்னையே திருத்திக் கொள்ளவேண்டும்.

6. ஒவ்வொருவரும் தன் உழைப்பால் வாழ முயல வேண்டும். பிறர் உழைப்பால் வாழ எண்ணுதல்

பெரும்பிழை. உழைப்பினாலும், உழைப்பினை மதிப்பதனாலும் ஏற்படும் நன்மைகள் பல. உழைப்பினால் பெறக்கூடாத பொருள்கள் ஒன்றுமில்லை. உழைப்பே உயிர். உழைப்பற்றவன் சோம்பேறி. அவன் தனக்கும் சுற்றத்தார்க்கும், உலகிற்கும் பாரம். உழைப்பினால் உண்ணுதலே உணவு. உழைப்பின்றி உண்ணுதல் உணவாகாது. "போனகம் என்பது தானுழந்து உண்டல்" என்பர் பெரியோர். உழைப்பு உண்டானால் ஏற்றத் தாழ்வு தோன்றாது; போலி மதிப்பு மனத்தைக் கவராது. உழைப்பிற்கு அடிப்படையாக இருப்பது விடாமுயற்சி. விடாமுயற்சி வாழ்க்கையில் வெற்றி தரும்.

7. ஒவ்வொருவரும் தன்மதிப்பு உடையவராக இருக்க வேண்டும். தன் மதிப்பு என்பதுதான் மானம். தன் மதிப்புக்குக் குறைவான செயல்களைச் செய்தால் அது பிறந்த குடிக்கே இழிவைத் தரும். தன் மதிப்பைப் பேணாதவனே தீய காரியங்களைச் செய்ய முற்படுவான். அவன் வாழ்க்கை இன்பம் ஒரு சிறிதும் இன்றித் துன்பமயமாக இருக்கும். போலிமதிப்பும் கொள்ளக்கூடாது. போலி மதிப்பு பெருந்தீமையை விளைவிக்கும். பணத்தினால் அடையக்கூடிய பயன்களில் மிகச் சிறந்த பயன் கல்வியே. கல்வி, பணத்தைத் தேடிக் கொடுக்கும். பணமில்லாவிட்டாலும் கல்வி மதிப்பை அளிக்கும். கல்வி பணத்தைப் பாதுகாக்கும். பணம் அழியும் கல்வி அழியாது. ஆதலால் இளமையிலேயே சிறுவர்கள் கல்வியாகியசெல்வத்தைத் தேடிக்கொள்ள முயலவேண்டும் பணம் பரம்பரையாக நிலைத்து நில்லாது. கல்வியோ பல தலைமுறைக்குத் தொடர்ந்துவரும். அதனாலன்றோ பெரி

யோர்,எச்சம் என ஒருவன் மக்கட்குச் செய்வன விச்சை மற்றல்ல பிற" என்றார்.

8. இளமை முதலே ஒழுக்கம், மெய்பேசுதல், உழைப்பு முதலான அரிய பண்புகளை வளர்த்தல் வேண்டும். அதற்கு நற்சார்பு வேண்டும். நல்லதோழர் களோடு பழகுதல் வேண்டும். தீய தோழர்களை அறவே நீக்குதல் வேண்டும். நல்ல பழக்கவழக்கங்களை இளமை முதலே கைக்கொண்டு ஒழுகாவிடின், பின் அவை நம் மைச் சாரா. ஆதலால் சிறுவர்கள், விடியற்காலையில் எழுதல், மேற்கொண்ட பணிகளைச் சோம்பலின்றிச் செய்தல், ஓய்வு நேரங்களை வீணாக்காது பயனுடைய நூல்களைக் கற்றல், எவரிடத்தும் அன்பாயிருத்தல், யாரிடமும் இனிய மொழிகளைப் பேசுதல், எவ்வுயிரிட மும் இரக்கம் காட்டுதல், பிறர்க்குத் தீமையை மனத்தி லும் நினையாதிருத்தல், பெரியோர்களைச் சார்ந்து அவர் கள் கூறும் நெறியில் நிற்றல். வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோளை மேற்கொள்ளல், இயன்ற அளவு பிறர்க்கு உதவுதல், பிறரிடம் பகைமை பாராட்டாதிருத்தல், பொய்பேசாது மெய் பேசுதல் முதலான அரிய பழக்க வழக்கங்களை இளமை முதற்கொண்டு ஒழுகுவாராயின் அவர்களும் உயர்வினை அடைவர்; புகழை எய்துவர்; இன்பவாழ்க்கை வாழ்வர். அவர்களுடைய நாடும் புகழும் பெருமையும் பெற்று விளங்கும்.

" கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க வதற்குத் தக "

என்னும் வள்ளுவர் வாய்மொழியை உள்ளத்திற் கொண்டு ஒழுகி உயர்வு எய்துவீர்களாக.

## 1. அருஞ்சொற்களும் பொருளும்

பயின்று – படித்து
அத்தகையார் – அப்பேர்ப்பட்டவர்
காவியம் – பெருநூல்
ஊன்றி – உறைந்து
பற்றுதல் – பிடித்துக்கொள்ளுதல்
தேவை – வேண்டும் நிலை
குறிக்கோள் – குறிப்பு (உம்)
உழந்து – வருந்தி
எச்சம் - மிச்சம்
பண்பு – குணம்
கசடு – குற்றம்
உயர்வு – மேன்மை

நெறி – வழி
சிந்தித்தல் - நினைத்தல்
தூய்மை – பரிசுத்தம்
துளங்க – விளங்க
மாசு – குற்றம்
அனைத்து – அவ்வளவு
பேண – காக்க
போனகம் – உணவு
இழிவு – கேவலம்
விச்சை – வித்தை
நற்சார்பு – நல்ல நேர்க்கை
அற – நீங்க
எய்வீர் – அடைவீர்

## 2. சிறுவிடை வினாக்கள்

1. சிறு மாணவர்கள் படிக்க வேண்டிய நீதி நூல்கள் எவை?
2. தமிழிலுள்ள சிறந்த நீதி நூல்களுள் இரண்டு கூறு.
3. எவற்றில் நீதிகளைக் காணலாம்?
4. எது எளிதான காரியம் அன்று?
5. மனத்தின் இயல்பு யாது?
6. நீதி நூல்கள் இயற்றக் காரணம் என்ன?
7. எவற்றை மனம் பற்றக் கூடாது?
8. எது அறன் என்று வள்ளுவர் கூறுகிறார்?
9. காந்தியடிகள் எதனால் சிறப்புற்றார்?
10. செல்வத்திற்கும் கல்விக்கும் உள்ள வேற்றுமை என்ன?
11. ஒவ்வொருவரும் எவ்வாறு வாழ முயல வேண்டும்?
12. உழைப்பைப்பற்றி அறிவது என்ன?

## 3. கட்டுரைப் பயிற்சி

1. மாணவர்களும் நீதி நூல்களும்
2. நீதி நூல்களின் அவசியம்
3. நற்பழக்கம்
4. மாணவர் ஒழுக்கம்

மேலே உள்ள தலைப்புக்களை அமைத்துத் தனித்தனியே ஒவ்வொரு பக்கத்தில் கட்டுரை எழுது.

## 4. இலக்கணம்

ஆ, பூ, தீ, ஈ, மா, வை, நீ, பா, — இவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் எழுத்து.

ஆ - பசு ; பூ - மலர் ; தீ - நெருப்பு ; ஈ - ஒரு ஜந்து ; மா-விலங்கு, மாமரம், வை - கூர்வை ; நீ - முன் நிற்பவன் ; பா - பாட்டு. இவை ஒவ்வொன்றும்பொருளைத் தருகிறது அல்லவா? இவை ஓரெழுத்தொருமொழி எனப்படும்.

அலை, அரசு, இலவம், பஞ்சரம் ; அம்பலம், - இவை இரண்டு முதலாகப் பல எழுத்துக்களால் ஆனவை. இவைகளும் பொருளைத் தருகின்றன. இவை எழுத்துத் தொடர் மொழி எனப்படும்.

எனவே, எழுத்துக்கள் தனித்தோ, இரண்டு முதலாகத் தொடர்ந்தோ நின்று ஒரு பொருளைத் தந்தால் மொழி எனப் படும்.

மொழி, சொல், கிளவி, வார்த்தை, பதம் என்பன ஒரு பொருளுடையன.

### பயிற்சி

ஓரெழுத்தொருமொழி, எழுத்துத் தொடர்மொழி - இவற்றிற்கு மூன்று மூன்று உதாரணங்கள் கொடு.

# 6. வீர வர்த்தனன்

1. 'விக்கிரமாதித்தன் கதை' என்று நம் நாட்டில் யாவரும் படிக்கும் நூல் ஒன்று உண்டு. அவன் வலிமை மிக்க மன்னர்களுள் ஒருவன். அவன் சமுத்திரகுப்தன் என்ற மன்னனுக்கு மகன். அவன் தாய் தத்தாதேவி. விக்கிரமாதித்தன் அரசனானதும் பல அரசர்களை வென்றான். அவன் நாட்டைச் செம்மையாக ஆண்டான். அவன் புலவர்களை ஆதரித்தான். வடமொழியில் காளிதாசர் என்னும் பெரும் புலவர் சாகுந்தலம் என்னும் நூலை இயற்றி அவன் அவையில் அரங்கேற்றினார். அவன் காலத்தில் வான நூல்களும் கணித நூல்களும் வெளிவந்தன. அவன் சிற்பம் ஓவியம் என்னும் கலைகளைப் போற்றி வளர்த்தான் என்பதை, அஜந்தாக்குகையிலுள்ள சிற்ப ஓவியங்கள் நன்கு விளக்கும். அவனைப் பற்றிப் பல கதைகள் உண்டு. இங்கு ஒரு கதையை அறிவோம்:

2. ஒருசமயம் விக்கிரமாதித்தன் முருக்க மரம் ஒன்றிலிருந்த வேதாளத்தைக் கட்டிக்கொண்டு வரும் போது வேதாளம் ஒரு கதை சொல்லியதாம். அந்தக் கதை இது:—

சரபம் என்பது ஒரு நகரம். அதனைச் சுக்கிரீவன் என்னும் மன்னன் ஆண்டுவந்தான். அவனிடத்தில் சிறந்த வீரன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் வீர வர்த்தனன் என்பது. அந்த வீரன் தன்னுடைய வலிமை வீரம் முதலியவற்றைப் பலவாறு எடுத்துக் கூறி மன்னனிடமிருந்து தினந்தோறும் ஆயிரம் பொன் சம்பளமா

கப் பெற்று வந்தான். அவனுக்கு இரவும் பகலும் அரண்மனை வாயிலைக் காத்துக்கொண்டிருப்பதுதான் வேலை. வீரவர்த்தனன் தன் கடமையைச் சிறிதும் வழுவாது செய்துவந்தான். அவன் தனக்குக் கிடைக்கும் ஆயிரம் பொன்னை நான்கு பாகமாகப் போட்டு, ஒரு பாகம் தெய்வத்திற்கும், ஒரு பாகம் துறவிகளுக்கும், ஒரு பாகம் தன் மந்திர சித்திக்கும், மற்றொரு பாகம் மனைவி மக்களுக்குமாக அமைத்துச் செலவிட்டு வந்தான்.

3. ஒரு சமயம் பெருங்காற்றும் வீசிப் பெருமழையும் பெய்தது. மரங்கள் எல்லாம் காற்றினால் முறிந்து விழுந்தன. மழையினால் வீடுகளெல்லாம் இடிந்தன. ஊழிக்காலமோ என்று யாவரும் ஐயமுற்று அயர்ந்தனர். அந் நகரத்தின் புறத்தே இருந்து ஒரு பேரழுகைக் குரல் கேட்டது. அக் குரல் மன்னன் செவிக்கு எட்டியது. மன்னன் திடுக்கிட்டான். அந்த அழுகுரல் காற்றொலியிலும் கடுமையாக இருந்தது. அப்பொழுதே சென்று அழுகுரலைப் பற்றிய செய்தியை அறிந்து வருபவர் யாரேனும் உள்ளாரோ என்று கேட்டான். இருள் நிறைந்த அந்த இரவுப் பொழுதில் வீரவர்த்தனன் அரசனை வணங்கி' தான் சென்று அறிந்து வருவதாகக் கூறிச் சென்றான். பெருஞ்சம்பளம் பெற்று அரண்மனைக் காவலன்றிப் பிறிதொரு வேலையும் இல்லாத வீரவர்த்தனன் செயலை ஆராய எண்ணங்கொண்ட அரசன் அவன் அறியாதவாறு மாறுவேடத்துடன் பின் தொடர்ந்து சென்றான். வீரவர்த்தனன் நேரே அழுகுரல் வரும் இடத்தை நோக்கிச் சென்றான். நடுக் காட்டில் ஒரு பெண் அழுது கொண்டிருத்தலைக் கண்டான்.

4. வீரவர்த்தனன் அப்பெண்ணைப் பார்த்து, "நீ யார்? உன் பெயர் என்ன? ஏன் அழுதுகொண்டிருக்கிறாய்? சொல்" என்று கேட்டான். அதற்கு அப் பெண், "நான் பூமிதேவி. இதுவரையில் நான் சுக்கிரீவ மன்னன் தோள்களில் தங்கி வாழ்ந்தேன். ஆனால் அந்த அரசன் இன்னும் மூன்று நாட்களில் இறப்பான். பின் என் கதி யாதாகுமோ என்று அஞ்சி அவல முற்று அழுகின்றேன்." என்றாள். அம்மொழிகளைக் கேட்ட வீரவர்த்தனன், "பூமி தேவியே, மன்னனுக்கு நேரும் மரணத்தைத் தடுக்க யாதேனும் வழி உண்டோ?" என்று வினவினான். பூமிதேவி, "உண்டு; ஆனால் அதனைச் செய்ய வல்லார் உள்ளாரோ என்பதைத்தான் நான் நினைத்துக் கவல்கின்றேன்," என்றாள். 'வழி உண்டு' என்று கேட்டதும் வீரவர்த்தனன் மகிழ்ந்தான். "நான் செய்கிறேன், வழியைக் கூறுக," என்றான் வீரவர்த்தனன். பூமிதேவி, "அன்ப, அதோ தெரிகின்றதே கோயில்; அக்கோயிலிலுள்ள துர்க்கைக்குப் பதினாறு வயதுள்ள சிறுவனைப் பலியாகக் கொடுக்கவேண்டும்," என்றாள்.

5. வீரவர்த்தனன் அம் மொழிகளைச் செவியில் ஏற்றதும் மிகவும் விரைந்து தன்வீட்டை அடைந்தான். அவன் மனைவி மக்களை அழைத்து, நடந்த செய்திகளை விளக்கமாகக் கூறினான். பின், அவன் தன் ஒரு மகனை அழைத்துக்கொண்டு நேராகத் துர்க்கை கோயிலுக்கு வந்தான். சிறிதும் மனக்கலக்கம் கொள்ளாமல் உயிரை மகிழ்ந்து காக்க எண்ணி, துர்க்கையின் முன் மகனை வணங்கி நிற்குமாறு செய்து, வாளை உருவி ஒரே வெட்டாக மகனை வெட்டிப் பலி ஈந்தான். அவன் செயலை அவனுடன் வந்த மனைவியும் மகளும் கண்டு, தத்தம்

கழுத்தை வாளால் அறுத்துக்கொண்டு மடிந்தனர். பின் வீரவர்த்தனன், மனைவியும் மகளும் இறந்ததால் தான் மட்டும் உயிர்வாழ்ந்து பயன் இல்லை என்று எண்ணி, வாளால் தன் கழுத்தையும் அறுத்துக்கொண்டு மாய்ந்தான். மன்னன் உயிரைக் காக்கும் பொருட்டுத் தந்தை, தாய், மகன், மகள் யாவருமே தம் ஆருயிர் துறந்தனர். இவற்றையெல்லாம் மறைந்து பார்த்துக்கொண்டிருந்த மன்னன் அவர்களுடைய ராஜ விசுவாசத்தை எண்ணி வியந்தான் அரசன். "நம் உயிர்காக்கும் பொருட்டன்றோ நால்வரும் மடிந்தனர்! இத்தகைய நன்றியறிதலுடையகுடும்பத்தினரை இழந்து நாம் மட்டும் வாழ்ந்து பெறும் பயன் என்ன? நாம் வாழ்தல் முறையோ? என்று பலவாறு எண்ணிக் கைவாளால் தன் கழுத்தை அறுத்துக் கொண்டு இறக்கத் துணிந்தான். அவன் வாளை உருவியவுடன் துர்க்கை நேரில் தோன்றினாள்; அரசனைத் தடுத்தாள்; நால்வரையும் பிழைப்பித்தாள். அரசன் ஒருவரும் அறியா முன்னர் அரண்மனையை அடைந்தான்.

6. வீரவர்த்தனன் மனைவி மக்களுடன் வீட்டை அடைந்தான். அவர்களை வீட்டில் விட்டுவிட்டுத் தான் அரண்மனை வாயிலை அடைந்து வழக்கம்போல் காவல் செய்தான். பொழுது புலர்ந்தது; மன்னன் கொலு மண்டபத்தை அடைந்தான். அவன் ஒன்றும் அறியாதவனைப்போல வீரவர்த்தனனை அழைப்பித்து அழுகுரலைப்பற்றி அறிந்து வந்தது உண்டோ? என்று வினவினான். வீரவர்த்தனன் மன்னனைப் பணிந்து, 'வேந்தே நான் சென்று ஒரு பெண் அழுவதின் காரணத்தைக் கேட்டேன். அவள் மறுமொழி கூறாமல்

அழுகையை நிறுத்திக் கொண்டாள்" என்று கூறினன். மன்னன் மனம் விம்மிதம் உற்றது. அறிந்ததை வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை. மன்னன், சபையோருக்கு வீரவர்த்தனன் செயலை விளக்கமாக எடுத்துக் கூறி, வீரவர்த்தனனின் நன்றியறிதல், ராஜ விசுவாசம் என்பவற்றை வெளிப்படுத்தினன். அவனைப் பலவாறு புகழ்ந்து, சிறந்த பரிசுகள் அளித்துச் சேனாதிபதி ஆக்கினன்.

7. இதுவே கதை. "இந்த ஐவர்களில் யார் சிறந்தவர்?" என்று வேதாளம் கேட்டது. அதற்கு விக்கிரமாதித்தன், "மன்னனே சிறந்தவன், வீரவர்த்தனன் வேலைக்காரன்தானே என்று நினையாமல் தன் கழுத்தையே அறுத்துக்கொள்ளத் துணிந்தான் அன்றோ!" என்று கூறினன்.

வேதாளம் கட்டினை அவிழ்த்துக்கொண்டு மீண்டும் முருக்க மரத்தின்மேல் ஏறிக்கொண்டது.

## 1. அருஞ்சொற்களும் பொருளும்

| | |
|---|---|
| ஆதரித்தார்-காப்பாற்றினர் | துறவி-சந்நியாசி |
| சிற்பம்-கற்சிலை | சித்தி-அடைதல் |
| ஓவியம்-சித்திரம் | ஐயம்-சந்தேகம் |
| வழுவாது-தவருது | அலமந்தனர்-வருந்தினர் |
| ஊழிக்காலம்-முடியும் காலம் | கவல்கின்றேன் -வருந்துகின்றேன் |
| விசுவாசம்-அன்பு | விம்மிதம்-பெருமகிழ்ச்சியால் திகைப்பு |

## 2. சிறு விடை வினாக்கள்

1. விக்கிரமாதித்தனைப்பற்றி எழுது

2. வேதாளம் கூறிய கதையைச் சுருக்கி எழுது

3. விரவர்த்தனன் வாழ்க்கையைப்பற்றி எழுது

4. பூமிதேவி, விரவர்த்தனனிடம் கூறியவை யாவை?

5. விரவர்த்தனன் செய்த அரியசெயல் யாது?

6. சுக்கிரீவன் விரவர்த்தனனிடம் கண்டறிந்தது என்ன?

7. வேதாளம் விக்கிரமாதித்தனைக் கேட்ட கேள்வியும் அதற்கு அவன் அளித்த விடையும் யாது?

## 3. கட்டுரைப் பயிற்சி

1. நாட்டுக்கதை நூல்கள் சில கூறு

(விக்கிரமாதித்தன் கதை, நல்லதங்காள் கதை, புலந்தரன் கதை)

2. தெனாலிராமன், மரியாதை ராமன், ராஜா விரபாலன் என்பாருடைய வினோதக் கதைகளில் இரண்டைச் சொல்; ஒன்றை எழுது.

3. வேடிக்கைக் கதை படிப்பதின் பயனை விளக்கு.

தலையாலங்கானத்துப் போர் வென்ற

# 7. பாண்டியன் நெடுஞ்செழியன்

1. முன்பு தமிழகம் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்ற மூன்று பிரிவுகளை உடையது. பாண்டிய நாட்டினை ஆண்டவர்கள் பாண்டியர் எனப் பட்டனர். பாண்டியர்கள் தமிழ்மொழியைச் சங்கம் அமைத்து வளர்த்துக் காத்தனர். அதனால் பாண்டிய நாட்டைச் செந்தமிழ்நாடு என்றும் கூறுவர். பாண்டியர்களில் பல்லோர் புலவர்கள் பாடும் புகழுடையோராய் விளங்கினர். அவர்களுடைய ஈகையும், வீரமும், அறமும், ஆட்சியும், புலவர்ப் போற்றலும், புலவர்களால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. மற்றும் அவர்களில் பலர், கவிகள் சமைக்கும் ஆற்றல் வாய்ந்தவராகவும் புலமை யுடையவராகவும் இருந்தனர். அத்தகையாரில் ஒருவன் பாண்டியன் நெடுஞ்செழியன் என்பான் ஆவன்.

2. நெடுஞ்செழியன் இளம்பருவத்திலேயே அரியணை ஏறினன். அவன் தந்தையை மிக்க இளையவனாக இருக்கும் பொழுதே இழந்து விட்டான். எனினும் அவன் மாங்குடி மருதனர், குடவியனர், இடைக்குன்றூர் கிழார் முதலான அரிய புலவர்களின் துணையால் நாட்டினைச் செவ்வையாக ஓம்பிவரலானன். புலவர் கூறும் மொழிகளைப் போற்றி அவற்றின் வழி

ஒழுகி வந்தான். நாட்டின் மக்கள் இனிது வாழ்தலைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தான். ஆறு களுக்கு அணைகளைக் கட்டுவித்தும், வாய்க்கால்கள் வெட்டுவித்தும், ஏரிகுளங்கள் எடுப்பித்தும், உணவுப் பொருள்களைப் பெருக்கினான். குடிகளுக்கு ஐவகை யாலும் அச்சம் உண்டாகாதபடி காத்து வந்தான். அவனைக் குடிமக்கள் அனைவரும் போற்றிப் புகழ்ந்தனர்.

3. அக்காலத்தில் சேர நாட்டை மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்பவன் ஆண்டு வந்தான். பாண்டிய னுக்கு அறிவும் ஆற்றலும் புகழும் வளருந்தோறும் மாந்தரஞ் சேரலுக்குப் பொறாமையும், கோபமும், பகையும் வளர்ந்தது. பாண்டியன் நெடுஞ்செழியன் இளையவனாய் இருந்தாலும் தன்னிலும் மேம்பட்ட வனாக இருத்தலை அவன் காண விரும்பவில்லை. அவன் பெரியவன் ஆனால் தன்னையும் வென்று விடுவானே என்று மாந்தரஞ்சேரல் மனத்தில் அச்சம் தோன்றிற்று. அது பகைமையை வளர்த்தது. 'முள் மரத்தை இளைய தாக இருக்கும் போது நகத்தால் கிள்ளி எறியலாம். அது மரமாகி விட்டால் வெட்டுங் கோடரியின் வாயை யும் மழுங்கச் செய்யும்' அல்லவா? சிறிய பகை என்று அலட்சியமாய் இருத்தல் ஆகாது. பெரிய உருவத்தை யுடையது யானை. ஆயினும் அது குளக்கரையில்நிற்கும் பொழுது சிறிய தவளை குதித்தாலும் அதனுடைய நிழலைக் காண முடியாது. ஆதலால், உடனே பகை வனான நெடுஞ்செழியனை ஒழிக்கவேண்டும் என்று மாந்தரஞ் சேரல் எண்ணினான். அவன் தன் கருத்தினை ஐந்து சிற்றரசர்களுக்கும் சோழனுக்கும் தெரிவித்தான். 'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்' அல்லவா?

எனவே, எழுவரும் பாண்டியன் நெடுஞ்செழியனை எதிர்த்துப் போர் செய்ய எழுந்தனர்.

4. நெடுஞ்செழியன் ஆண்டில் இளையனாயினும் அறிவில் முதிர்ந்தவன்; வீரத்தில் சிறந்தவன். சேரனுடைய தூண்டுதலால் சோழனும் குறுநிலமன்னர் ஐவரும் பொருதற்கு எழுந்தனர் என்பதை நெடுஞ்செழியன் நன்கு உணர்ந்தான். ஆண்மையிற் சிறந்த அவன், உடனே படைகளைத்திரட்டினான். தான் ஒருவன் ஆயிற்றே; பகைவர் எழுவராயிற்றே என்று அவன் சிறிதும் அஞ்சவில்லை. தன் சேனைவீரர்களை நோக்கி நெடுஞ்செழியன், பாண்டி வீரர்களே! சேரனும் சோழனும் மற்றஐவரும் என்னை ஆண்டில் இளையவன் என்று இகழ்ந்து கூறினர். தாங்கள் மிக்க படைபலம் பெற்றிருப்பதால் என்னை எளிதில் வென்று விடலாம் என்று மனக் கோட்டை கட்டுகின்றனர். சிறுசொல் சொல்லிய அவர்களை இப்போரில் அகப்படுத்தாமல் இருப்பேனா? அவர்களைச் சிறைப் படுத்தேனாயின் என்னை என் குடிமக்கள் கொடுங்கோலன் என்று தூற்றட்டும்; மாங்குடி மருதனார் முதலான புலவர்கள் எம் நாட்டைப் பாடாமல் நீங்கட்டும். என் சுற்றத்தார் துன்பத்திற்குள்ளாகட்டும். யாசிப்பவர்க்குக் கொடுக்க இயலாத வறுமையை நான் அடைவேனாக" என்று வீர மொழிகளால் சபதம் கூறிப் போர்மேற் சென்றான்.

5. பகைவர் படைகளை நெடுஞ்செழியன் படை சென்று தாக்கின. ஆலங்கானம் என்னும் இடத்தில் கடும்போர் மூண்டது. ஒருவனை ஒருவன் தாக்குதல் உலகியற்கை; ஆனால் ஒருவனை எழுவர் தாக்குகின்றனர்.

வீர இளைஞனை நெடுஞ்செழியன் பகைவரைத் தாக்கி விண்ணுக்கு அனுப்புகின்றான். அவன் பிறரை அவமதிக்கவும் இல்லை; செருக்குக் கொள்ளவும் இல்லை'' என்று இடைக்குன்றூர் கிழார் வியந்து கூறுமாறு பொருதான். பகைவரைத் தாக்கி விரட்டிச் சென்று அவர்கள் நகருக்கு அருகிலேயே கொன்றான். புலவர்கள் அவன் வீரத்தைப் புகழ்ந்து பாடினர். இதுவே நெடுஞ்செழியன் முதல்முதல் நடத்திய பெரும் போர். இதில் அவன் வெற்றியும் பெற்றான். ஆதலால் அவனை எல்லோரும் 'தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்' என்று கூறினர். அவன் பிற்காலத்தில் பல போர்களை வென்றான்; தமிழை வளர்த்தான்; புலவர்களைப் போற்றினான்; புகழை நாட்டினான். மாங்குடி மருதனார் என்னும் கடைச்சங்கப் புலவர் அவன் மீது ட் த்துப் பாட்டுள் ஒன்றான மதுரைக்காஞ்சி, என்னும் பாடலைப்பாடியுள்ளார். அந்நூலினால் நெடுஞ்செழியன் இயல்பும், வீரமும் இனிது விளங்கும்.

## 1. அருஞ்சொற்களும் பொருளும்

அமைத்து - ஏற்படுத்தி
போற்றல் – காத்தல், புகழ்தல்
ஆற்றல் – வலிமை, திறமை
வாய்ந்தவர் – பொருந்தியவர்
அரியணை – சிம்மாசனம்
மனக்கோட்டை - மனத்தில் பலப்பல நினைத்தல்
சிறுசொல் – இகழ்ச்சியான வார்த்தை
செவ்வையாக – செம்மையாக
ஓம்பி – காத்து
ஐவகைக் குற்றம் – அரசனால், தன் பரிவாரங்களால், பகைவரால், கள்வரால், வன விலங்குகளால் குடிகளுக்கு உண்டாகும் தீங்கு
மேம்பட்டவன் – உயர்ந்தவன்
சபதம் – வஞ்சினம்

காட்டினன் - நிலைபெறச் செய்தான்
கவிகள் - செய்யுட்கள்
செரு - போர்
சமைக்கும் - இயற்றும்

## சிறுவிடை வினக்கள்

1. பாண்டிய நாட்டிற்குச் செந்தமிழ் நாடு என்று பெயர் வரக் காரணம் என்ன ?
2. பாண்டியர்கள் எத்தகையவர்களாய் வாழ்ந்தனர் ?
3. பாண்டியர்கள் எத்தகைய இயல்பு பெற்றிருந்தனர் ?
4. நெடுஞ்செழியன் எப்புலவர்களின் துணையைப் பெற்றான் ?
5. நெடுஞ்செழியன் நாட்டிற்குச் செய்த நலன்கள் யாவை?
6. ஐவகை அச்சம் என்பது யாது ?
7. மாந்தரஞ் சேரலிரும் பொறை யார் ? என்ன கருதினன் ?
8 'பகையைத் தொடக்கத்திலேயே அழிக்கவேண்டும் ; அற்பமானது என்று கருதிவிட்டிருத்தல் ஆகாது' - இக்கருத்தை விளக்க வந்த உவமைகள் யாவை ?
9. இரும்பொறை யாது செய்தான் ?
10. நெடுஞ்செழியன் பகைவர்களைக் கண்டதும் கூறிய வஞ்சினம் யாது ?
11. 'மாங்குடி மருதனர் முதலான புலவர்கள் எங் நாட்டைப் பாடாது நீங்கட்டும்'-இந்த அடியால் அறியப்படுவது யாது ?
12. நெடுஞ்செழியன் வீரப்போர் புரிந்ததை இடைக்குன்றூர் கிழார் எவ்வாறு இரங்கிப் பாராட்டுகிறார் ?

13. மாங்குடி மருதனார் யார்? அவர் நெடுஞ்செழியன்மீது பாடிய நூல் யாது?

14. அந்த நூல் எந்தத் தொகை நூலைச் சேர்ந்தது?

15. அதில் கூறப்படுவதென்ன?

## கட்டுரைப் பயிற்சி

கட்டுரை எழுது :-


1. பாண்டியர் தமிழை வளர்த்த முறை.
2. தமிழ் மன்னர் காலத்துப் போரைப்பற்றி அறிவன.
3. அரசரும் புலவர்களும்.

# 8. கவிமணி

1. தமிழகத்தில் தோன்றிய புலவர்கள் பல்லோர். தமிழ் மொழியின் வளர்ச்சியைக் கருதி அவ்வக் காலத்தில் தோன்றிய புலவர்கள், காலத்திற்கு ஏற்றவாறு நூல்களை இயற்றித் தமிழ்மொழியை வளர்த்தனர். அதனுல் தமிழ் மொழி பலவகை மாறுதல்களைப் பெற்று நாட்டிற்கும் காலத்திற்கும் ஏற்றவாறு அமைந்து மக்களுக்கு நன்மையை விளைவிப்பதாய் ஓங்கி வளர்வதாயிற்று. அவ்வாறு மொழி ஓங்கி வளர்வதற்குக் காரணம் அவ்வக் காலத்தில் தோன்றிய புலவர்களே ஆவர். அத்தகைய தொண்டில் சிறந்து தாய் மொழியான தமிழிற்குத் தொண்டு செய்த பெரும் புலவரில் ஒருவர் தேசிக விநாயகம் பிள்ளை ஆவார்.

2. தமிழகத்தில் ஒரு சிறுபகுதி நாஞ்சில் நாடு என்று பெயர் பெறும். தமிழ் நாட்டின் தென்பகுதியும் திருவிதாங்கூர் கொச்சி ராஜ்யத்தின் தென்கோடியுமான பகுதியே நாஞ்சில் நாடு என்று கூறப்படுவது. தமிழகத்தின் தெற்கு எல்லையான குமரிமுனை நாஞ்சில் நாட்டில் உள்ளதே. சுசீந்திரம் என்ற திருத்தலமும் அந்நாட்டின் கண் உள்ளதே ஆகும். பழைய சங்க காலத்திலும் இந்நாடு புலவர் ஒருவரைத் தந்து புகழ்படைத்துள்ளது. நாஞ்சில் வள்ளுவன் என்னும் சங்ககாலப் புலவர் இந்நாட்டில் பிறந்தவரே யாவர்.

3. நாஞ்சில் நாட்டில் தேரூர் என்பது ஓர் அழகிய சிற்றூர். அவ்வழகுமிகு ஊரில் சிவதாணுப் பிள்ளை



கவிமணி

என்பார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் மனைவியார் ஆதிலட்சுமியம்மையார் ஆவார். அவ்விருவரின் அருந் தவப் புதல்வராய்த் தேசிக விநாயகம் பிள்ளை 1876 ஆம் ஆண்டு பிறந்தார். கவிமணியின் முன்னோர்கள் வாணி கத்தின் பொருட்டு நாகைப்பட்டினத்தில் நீண்ட காலம் வாழ்ந்திருந்தனர். பின்னர் அவர்கள் தேரூருக்கே சென் றனர். அவர்கள் சிறந்த தமிழ்ப் பயிற்சியுடையவர்க ளாயும் கவி பாடுவதில் வல்லவர்களாயும் இருந்தனர். தாய்வழிப்பாட்டனரான மாணிக்க வாசகம் பிள்ளை என் பவர் காரியந்தாதி என்னும் பிரபந்தத்தைப் பாடியுள் ளார். எனவே, தாய்வழி, தந்தைவழி என்னும் இரு வழிகளிலும் தமிழ்ப் பயிற்சியுள்ள குடும்பத்திலே பிறந் தவர் தேசிக விநாயகம் பிள்ளை.

4. கவிமணி அவர் பெற்றோருக்கு ஒரே புதல்வர். ஆதலால், அவர் மிகவும் செல்வமாக வளர்க்கப்பட்டார். அவர் முதலில் தேரூர்ப் பள்ளிக்கூடத்தில் கல்வி பயின் றார். அங்கு அவர் மலையாளமும் தமிழும் கற்றுக் கொண்டார். பின் அவர் கோட்டாற்றிலுள்ள அரசாங் கப் பள்ளியில் சேர்ந்து கல்வி பயின்றார். இக்காலத்தில் அவர் தந்தையார் இவ்வுலகை நீத்தார். எனினும் தாயா ரின் ஊக்கத்தால் படித்து மெட்ரிகுலேஷன் பரீட்சை யில் தேர்ச்சி பெற்றார். மேற்படிப்பிற்காக அவர் நாகர் கோயிலிலுள்ள ஆங்கிலக் கல்லூரியில் எப். ஏ வகுப் பில் சேர்ந்து படித்து வந்தார். ஆனால் படிப்பைத் தொடர்ந்து படிக்கமுடியாமல், சில காரணங்களால் இடையே நிறுத்திவிட நேர்ந்தது. பின் அவர் திருவனந் தபுரம் சென்று ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து படித்து ஆசிரியப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றார்.

5. கவிமணிக்குத் தமிழ் மொழியில் மிக்க ஆர்வமுண்டு. ஆனால் அதனைப் பெருக்கப் பள்ளியில் வழியில்லை. மலையாள மொழியே முதன்மை பெற்றிருந்தது. அந்நிலையில் கவிமணி என்ன செய்வார்? தேரூருக்கு வடபக்கத்திலுள்ள ஏரியின் நடுவில் வாணன் திட்டு என்ற ஓர் இடமும் உண்டு. அங்குத் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த மடம் ஒன்று உண்டு. அந்த மடத்தில் சாந்தலிங்கத் தம்பிரான் என்பவர் வசித்து வந்தார். அவர் தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் சைவ சமய நூல்களையும் நன்கு கற்றவர். அவரிடம் பலர் வந்து பாடங் கேட்டுக்கொண்டிருந்தனர். கவிமணி அப்பெரியாரிடம் சென்று முறையாகத் தமிழ்ப்பாடங் கற்று வந்தார். இலக்கிய இலக்கணங்களையும் அவரிடம் நன்றாகக் கவிமணி கற்றறிந்தார். கவிபாடும் திறமையும் அவர் பெற்றார். அந்நாளில் கவிமணி 'அழகம்மை ஆசிரியவிருத்தம்' 'சுசீந்தை மாலை' என்பனவற்றை இயற்றினார்.

6. கவிமணி கோட்டாற்றில் ஆரம்பப் பாடசாலையில் ஆசிரியராக அமர்ந்தார். அப்பொழுது அவருக்கு வயது இருபத்தைந்து. பின்னர் அவர் நாகர்கோயில் போதனா முறைக் கலாசாலை ஆசிரியர் ஆனார். அரசாங்கத்தினர் கவிமணியின் புலமையை அறிந்து அவரைத் திருவனந்தபுரம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராக நியமித்தனர். இக்காலத்தில் கவிமணி குழந்தைகளுக்கென எளிய இனிய கவிதைகளைப் பாடினார். கவிமணிக்குக் குழந்தைகளிடம் பேரன்பு உண்டு. பின்பு 'மலரும் மாலையும்' என்ற நூலை வெளிப்படுத்திய பொழுது,

" செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு
இந்தநூல் உரியதாய் என்றும் வாழ்கவே "

என்று கூறியிருத்தலால் இதனைநன்குஅறியலாம். சிறிது காலத்திற்குள் மகாராஜா பெண் கல்லூரித் தமிழ் விரிவுரையாளராகக் கவிமணி அரசாங்கத்தாரால் மாற்றப் பட்டார். அவர் பிற்காலம் முழுவதும் அக்கல்லூரியில் வேலை பார்த்து 1931-ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்; அவர் புத்தேரியில் வந்து தங்கினார். புத்தேரி என்பது நாகர் கோயிலுக்கு வடக்கே இரண்டு கல் தூரத்தில் உள்ளது.

7. கவிமணிக்குத் தமிழ் நாட்டு வரலாற்று நூலிலும், கல்வெட்டு ஆராய்ச்சியிலும் நிறைந்த புலமை உண்டு. அவர் பல கட்டுரைகள் வரைந்தார். அவைகள் பல பத்திரிகைகளில் வெளிவந்தன. கவிமணி 1901-ஆம் ஆண்டு நாகர் கோயிலை அடுத்த புத்தேரியிலிருந்த சிறந்த குடும்பத்தில் பிறந்த உமையம்மையார் என்பாரை மணந்து கொண்டார். அவர் முதலில் தம் பெயரை வெளிப்படுத்தாமல் ஆண்டான்கவிராயன், ஐயம் பிள்ளை, தேவி, குயில், யதார்த்தவாதி என்ற புனை பெயர்களால் தம் கட்டுரைகளையும் கவிதைகளையும் வெளியிட்டு வந்தார். அதனால் தமிழகம் நீண்டகாலம் அவரை அறியாதிருந்தது. பிற்காலத்தில் புரட்சி நேயன், தமிழன், தேவி, குமாரன், செந்தமிழ், கலைமகள், ஆனந்த விகடன், கல்கி, தினமணி, ஈழகேசரி முதலிய பல்வேறு உயர்தரப் பத்திரிகைகளால் தமிழகமும் பிறநாடுகளும் கவிமணியை அறிந்தது. பிற்காலத்தில் அவர் ஆசி பெறாத பத்திரிகைகளே இல்லை என்னலாம்

8. ஓய்வு பெற்ற பிறகு கவிமணி தாம் பாடிய கவிதைகளைத் தொகுத்து 'மலரும் மாலையும்' என்ற பெயரால் வெளியிட்டார். அதனுள் '**லைட் ஆப் ஏஷியா**' என்பது **எட்வின் ஆர்னால்டு** என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய **கவிதை** நூல்; அது புத்தரது வாழ்க்கை வரலாற்றைக் கூறுவது. அதனை '**ஆசிய ஜோதி**' என்று பெயரிட்டு அழகிய கவிதை நூலாகப் பாடியுள்ளார். பாரஸிகக் கவிஞர் **உமார் கய்யாம்** என்பவர் இயற்றிய கவிதைகளைத் தமிழ்ச் செய்யுள்களாகப் பாடியுள்ளார். நாஞ்சில் நாட்டு வேளாளர்களின் குடும்பத் தாயமுறையைப் பரிகசிப்பதுபோல நகைச்சுவை ததும்ப '**நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழிமான்மியம்**' என்ற நூலைப்பாடியுள்ளார். கவிமணிக்கு இசையிலும் செம்மையான புலமை புண்டு. இதனைக் கீர்த்தனைகளும் பாடல்களும் கொண்ட '**காதல் பிறந்த கதை**' என்னும் நூல் நன்கு புலப்படுத்தும்.

9 கவிமணி ஆங்கிலத்திலும் சுவைபடக் கட்டுரைகள் எழுத வல்லவர். அவர் பளிங்கு போன்ற தூய உள்ளம் படைத்தவர். அவர் உள்ளத் தெளிவை அவருடைய பாடல்கள் நன்கு விளக்கும். அவர் பிறரிடம் கெஞ்சி நிற்கும் இயல்பினரல்லர். அடிமைத் தன்மையை அவர் முற்றிலும் வெறுத்தார். 1940-ஆம் ஆண்டு சென்னை மாகாணத் தமிழ் சங்கம் அவருக்குக் **கவிமணி** என்னும் பட்டம் அளித்துச் சிறப்பித்தது செட்டி நாட்டு அரசரான ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் கவிமணியைத் தம் மாளிகைக்கு அழைத்து வந்து, விருந்தளித்து, ஆயிரம் ரூபாய்க் கிழியும் கொடுத்துப் பாராட்டிச் சிறப்பித்தார். அப்

பொழுது கவிமணி "முடிப்பு எதற்கு?" என்று கேட்டு, பின் அம்முடிப்பைக் கொண்டு திருவிதாங்கூர்ப் பல் கலைக் கழகத்தில் பி. ஏ. பரீட்சையில் முதல்வராகத் தமிழில் தேர்ச்சி பெருபவர்க்கு ஆண்டு தோறும் பரிசு அளிக்குமாறு மூலதனமாக அளித்தார். இச் செயல் கவிமணிக்குப் பொருளில் பற்றில்லை என்பதை விளக்கவில்லையா?

10. கவிமணிக்குத் தேசியகவி சுப்பிரமணிய பாரதியாரிடம் நிறைந்த அன்பு உண்டு. பாரதியார் பாடல்களைச் சுவைத்துப் படித்தவர் கவிமணி என்பதைப் "பாடியவாய் தேனூறும் பாரதியார் பாடல்" என்பதனுலும் "பாப்பா பாட்டில் நெஞ்சைப் பறி கொடுத்தேன்" என்பதனுலும் அறியலாம். இப்பெரும் புலவர் தம் முதிர்ந்த வயதிலும் படித்துக்கொண்டும், பத்திரிகைகளுக்குக் கவிகள் பாடிக்கொண்டும் இருந்தார். இவர் 1954 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26-ம் தேதி அன்று இவ்வுலக வாழ்வை நீத்துத் தமிழர்களின் உள்ளங்களில் நீங்காது நிலைபெற்ருர்.

### 1. அருஞ்சொற்களும் பொருளும்

| | |
|---|---|
| மாறுதல் - மாறுபாடு, பேதம் | கல்லூரி - காலேஜ் |
| ஏற்றவாறு - பொருந்தியவாறு | ஆர்வம் - ஆசை |
| சமஸ்தானம் - இராஜ்யம் | சமயம் - மதம் |
| பிரபந்தம் - சிறுநூல் | யதார்த்தவாதி - உண்மைபேசு (பவன் |
| பளிங்கு - கண்ணுடி | ஆசி - ஆசிர்வாதம் |
| கட்டுரை - வியாசம் | மூலதனம் - முதலாகிய பணம் |
| சாந்தி - அமைதி | உண்டாவதாக - அடைவதாக |

## 2. சிறுவிடை வினாக்கள்

1. தமிழ்ப்புலவர்கள் மொழிக்கு யாது செய்தனர்?
2. கவிமணி எந்நாட்டில் எங்குப் பிறந்தார்?
3. கவிமணி பிறந்த நாட்டில் தோன்றிய சங்கப் புலவர் யார்?
4. கவிமணியின் முன்னோரைப்பற்றி எழுது.
5. காரியந்தாதி யார் பாடியது?
6. கவிமணியின் இளமையும், கல்வியும் பற்றி எழுது?
7. கவிமணி யாரிடம் தமிழ் கற்றார்?
8. கவிமணியின் தொழில் முறை பற்றி எழுது.
9. கவிமணி இயற்றிய நூல்கள் எவை?
10. கவிமணியின் கட்டுரைகள், கவிதைகள் வெளிவந்த பத்திரிகைகள் எவை?
11. கவிமணி பெற்ற பாராட்டுகளைப் பற்றி எழுது.
12. கவிமணி பாரதியாரிடம் பற்றுக்கொண்டவர் என்பதை விளக்கு.

### கட்டுரைப் பயிற்சி

1. தமிழ் மொழி வளர்ச்சிக்கு இக்காலத்தில் செய்யவேண்டிய தொண்டு.

2. புலவர்களைப் பாராட்டுதல் நாட்டுக்கும் மொழிக்கும் பெருமை தரும்.

# செய்யுள் பகுதி

## 1. கடவுள் வாழ்த்து

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி யென்
மனத்தே
வழுவா திருக்க வரந்தரல் வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலி
யூர்ச்
செழுநீர் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த
தீவண்ணனே.

அருமறை முதல்வனை ஆழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனை
திருமகள் தலைவனை தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம் 2

## 2. அறவுரை

### 1. நன்னெறி

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங் காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் போத்து
விடுத்தல் அரிதோ விளம்பு. 1

இல்லானுக் கன்பிங் கிடம்பொருள் ஏவல்மற்
றெல்லாம் இருந்துமவற் கென்செய்யும்—நல்லாய் !
மொழியிலார்க் கேது முதுநூல் ? தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு ? 2

முனிவினும் நல்குவர் மூதறிஞர் உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர்—நனிவிளவில்
காயினும் ஆகும் கதலிதான் எட்டிபழுத்
தாயினும் ஆமோ அறை. 3

## 2. நீதி நெறிவிளக்கம்

அவைஅஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் கல்லார்
அவை அஞ்சா ஆகுலச் சொல்லும்—நவைஅஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று 1

எத்துணைய வாயினுங் கல்வி இடமறிந்து
உய்த்துணர் வில்லெனின் இல்லாகும்—உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை இல்லெனின் என்னாகும் அஃதுஉண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து 2

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மின்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே இதற்கு நாமென்று 3

## 3. இனிது நாற்பது

பிச்சைபுக் காயினும் கற்றல் மிகவினிதே;
நற்சவையில் கைகொடுத்தல் சாலவும் முன்னினிதே
முத்தோர் முறுவலார் சொல்லினிது; ஆங்கினிதே
தெற்றவும் மேலாயார் சேர்வு 1

கயவரைக் கையிகந்து வாழ்தல் இனிதே;
உயர்வுள்ளி ஊக்கம் பிறத்தல் இனிதே;
எளியர் இவரென்று இகழ்ந்துரையா ராகி
ஒளிபட வாழ்தல் இனிது 2

மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே;
தானம் அழியாமை தானடங்கி வாழ்வினிதே;
ஊனமொன் றின்றி உயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லாம் இனிது. 3

## 4. இன்னா நாற்பது

பொருளுணர்வார் இல்வழிப் பாட்டுரைத்தல் இன்னா
இருள்கூர் சிறுநெறி தாந்தனிப் போக் கின்னா;
அருளிலார் தங்கட் செலவின்னா; இன்னா
பொருளிலார் வண்மை புரிவு 1

நட்டார் இடுக்கண்கள் காண்டல் நனிஇன்னா;
ஒட்டார் பெருமிதம் காண்டல் பெரிதின்னா;
கட்டிலா மூதூர் உறைவின்னா; ஆங்கின்னா
நட்ட கவற்றினாற் சூது. 2

ஆற்றல் இலாதான் பிடித்த படையின்னா;
நாற்ற மிலாத மலரின் அழகின்னா;
தோற்ற மிலாதான் துணிவின்னா; ஆங்கின்னா
மாற்ற மறியான் உரை 3

## 5. நான் மணிக்கடிகை

கிலத்துக் கனியென்ப நெல்லுங் கரும்பும்;
குளத்துக் கனி என்ப தாமரை; பெண்மை
நலத்துக் கனி என்ப நாணம்; தனக்கனி
தான் செல் லுலகத் தறம். 1

இன்னுமை வேண்டின் இரவெழுக; இவ்வுலகில்
மன்னுதல் வேண்டின் இசைநடுக; தன்னொடு
செல்வது வேண்டின் அறஞ்செய்க; வெல்வது
வேண்டின் வெகுளி விடல் 2

மனைக்குப்பாழ் வாணுதல் இன்மை; தான்செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை இன்மை; இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை; தனக்குப்
பாழ்
கற்றறி வில்லா வுடம்பு. 3

## 6. திரிகடுகம்

தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்;
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணுதான்;
கோளாளன் என்பான் மறவாதான் ; இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது 1

தன்னச்சிச் சென்ருரை எள்ளா ஒருவனும்
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்
என்றும் அழுக்காறு இகந்தானும், இம்மூவர்
நின்ற புகழுடை யார்.

தன்னை வியந்து தருக்கலும், தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்,—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையும், இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை. 3

## 7. திருக்குறள்

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல். 1

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணி; அல்ல மற்றுப்பிற. 2

எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. 3

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 4

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். 5

ஒழுக்காறுக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்
தழுக்கா றிலாத இயல்பு. 6

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை. 7

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். 8

பொறியின்மை யார்க்கும் பழியன்று; அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி 9

உடுக்கை இழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 10

## 3. கதைப் பகுதி

பாடுறு மூடனுக்குப் பற்பல போதித்தாலும்
வீடுடை யவனை வீட்டை இழந்திடச் செய்வான் என்று
நீடுறு சன்மன் சொல்வான் நெடியதோர் பழு மரத்திற்
கூடுகொண் டனவி ரண்டு தூக்கணங் குருவி தாமே 1

குளிரினால் நடுங்கி வானக் கொடுமழை யால் நனைந்து
களிர்சுரத் தோடு தேகம் நடுங்கியே பற்கள் கிட்டி

வளமுறு குரங்கொன் றங்கு வந்தது குருவி பார்த்தே
இளகிய மனத்தி னூலே இன்சொல்லால் ஒன்று
சொல்லும் 2

கைகள் தாம் இருந்தும் இந்தக் கன்மத்தை அனுப
விக்கும்
செய்தியென் என்ன ஊசி மூஞ்சிகொள் சிறியமூடா
வைதுநீ புத்தி சொல்ல வல்லையோ எனக்கே என்றங்
கெய்திமேல் அதன்தன் கூட்டை இருகையால்
பிய்த்த தன்றே 3

## II

கோடுறு சினையிற் காகம் கூடுவைத் தனேக காலம்
பேடொடு கூடி வாழும் பெருமரப் பொந்தில வந்தே
ஆடிய கரும்பாம் பொன்றங் கதுபெறு முட்டை
யெல்லாம்
நாடியே குடித்துப் போட நலிந்துளம் மெலிந்து
வாடி 1

தன்னுயிர் பாங்க னான சம்புகன் அருகுபோய்,
"இங்கு
என்ன செய்குவேன்" என்ன, "இதைக்கொல
அரிதோ?" "நீ போய்
மன்னவன் தேவி யாடும் மஞ்சன சாலை புக்குப்
பொன்னணி கொண்டு வந்து போடுக பொந்தில்,"
என்ன 2

காகமப் படியே செய்யக் காவலன் ஏவலாளர்
ஏகிமா மரத்தின பொந்தை ஈர்ந்தனர்; ஈரும்போதில்
நாகமங் கிருந்து சீற நறுக்கினர் இருதுண்டாக,
ஆகையால் உபாயந் தாகா தில்லென அறையலாமே

—வீரமார்த்தாண்டதேவர் (பஞ்சதந்திரம்)

# 4. பல்சுவை

கார்என்று பேர்படைத்தாய் ககனத்து உறும்போது
நீர் என்று பேர்படைத்தாய் நீள்நிலத்தில் வந்ததற்பின்
வார் ஒன்று பூங்குழலாள் ஆய்ச்சியர்கை வந்ததற்
பின்
மோர்என்றுபேர்படைத்தாய் முப்பேரும் பெற்ருயே

குணமிருந் தாலும் குலமிருந்தாலும் கொழுந்தமிழின்
மணமிருந் தாலும் ஒருகாசும் பெருதுசிங் கார
அரைப்
பணமிருந் தாலவர்க் கெல்லாரும் அஞ்சலி பண்ணு
வாரே 2

கல்லேத்தான் மண்ணேத்தான் கரைத்துத்தான் குடிக்
கத்தான் கற்பித்தாஞ?
இல்லேத்தான் பொன்னேத்தான் எனக்குத்தான்
கொடுத்துத்தான் இரட்சித்தாஞ ?
அல்லேத்தான் சொல்லித்தான் ஆரைத்தான்
நோவத்தான் ஐயோவெங்கும்
பல்லேத்தான் திறக்கத்தான் பதுமத்தான் புவியில்
தான் பண்ணிஞனே 3

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையும் நடைப்பழக்கம்; நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம். 4

வில்லா லடிக்கச் செருப்பால் உதைக்க வெகுண்
டொருவன்
கல்லால் எறியப் பிரம்பால் அடிக்கக் காசினியில்

அல்லார் பொழில்தில்லை அம்பல வாணர்க்கோ
ரன்னைபிதா
இல்லாத் தாலல்லவோ இங்ஙனேயெளி
தானதுவே 5

கற்றதுகைம் மண்ணளவு கல்லா ததுஉலகளவுஎன்று
உற்ற கலைமடந்தை ஓதுகிருள்—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டா; புலவீர்!
எறும்புந்தன் கையால்எண் சாண். 6

கேட்ட வரமளிக்கும் கீர்த்தியுள்ள தெய்வங்காள்!
கூட்டோடும் எங்கே குடிபோனீர்— பாட்டாய்!
கேள்
செல்கால மெல்லாம் செலுத்திளேம்; அல்காலம்
கல்லாளேம் செம்பாளேம் காண். 7

## உரைப் பகுதி

# 1. கடவுள் வாழ்த்து

*1. புண்ணியா-மேலோனே, வழுவாது-தவறாது, வைய கத்தே-பூமியில், தொழுவார்-வணங்குவோர், அருள்செய்-கருணை செய்யும், செழுமை+நீர்=செழுநீர்—வளப்பமான நீர், புனல்கங்கை-மிக்க நீருடைய கங்கை: செம்மை+சடை=செஞ் சடை, தீவண்ணன்-தீயையொத்த நிறத்தை உடையவன்.*

*2. அருமறை - அரியவேதம்,, ஆழி - சக்கராயுதம், கருமுகில்-கரியமேகம், வண்ணன்-நிறம் உடையவன், கமலக் கண்-தாமரைமலர்போன்ற கண், திருமகள்-இலக்குமி, இரு பதமுளரிகள்-இரண்டு பாதங்களாகிய தாமரைகள், இறைஞ்சி-வணங்கி, ஏத்துவாம்-துதிப்போம்.*

# 2. அறவுரை

## 1. நன்னெறி

*1. உள்ளம்-மனம், ஓங்குசினம்-பெருகும் சினம், காத்துக் கொள்ளுதல்-எழாமல் தடுத்துக்கொள்ளுதல், அரிதோ-கஷ்டமோ, தடம்கரை-விசாலமான கரை, பேர்த்து விடுத்தல்-இடித்தல்.*

*2. இல்லானுக்கு-அன்பு இல்லாதவனுக்கு, இடம்-நிலமும் வீடும், ஏவல்-வேலையாட்கள், என்செய்யும்-என்ன பயனைத் தரும்? நல்லாய்-நற்குணமுடையவளே, மொழியிலார்-ஊமைகள். முதுநூல்—பழமையான நூல், வேதம்;' விழியிலார்-குருடர்கள் , ஏது-பயன் ஏது ?*

3. முனிவு-கோபம், *முதறிஞர்-சிறந்த அறிவினையுடையோர், உள்ளக்கனிவு-மனச்சந்தோஷம், நல்குவர்+நல்கார்; நல்குதல்-கொடுத்தல், நனிவிளைவு இல்-மிக்க விளைவு இல்லாத கதலிவாழை, எட்டி - ஒருவகை மரம்.

## 2. நீதி நெறிவிளக்கம்

1. அவை-சபை, மெய்விதிர்ப்பார்-சரீரம் நடுங்குபவர், கல்லார்-படியாதவர், ஆகுலச்சொல்-ஆரவாரமான சொற்கள், நவை அஞ்சி-பழிக்குப்பயந்து, ஈத்து உண்ணார்-கொடுத்து உண்ணாதவர், நல்கூர்ந்தார்-தரித்திரர், இன்னலம்-இனிய கருணை, பூத்தலில்-உண்டாவதினும்

2. எத்துணைய - எவ்வளவு, உய்த்து உணர்வு - உற்று ஆராய்ந்து அறியும் அறிவு, சொல்வன்மை-பேச்சுத்திறன், நாற்றம்-மணம், வாசனை.

3. தம்மின்-தங்களைக்காட்டிலும், மெலியார்-ஏழைகள்; உடைமை-செல்வம், அம்மா-வியப்பு இடைச்சொல். அகம்-மனம், கருத்து அழிக-செருக்கு நீங்குக, எற்று-எவ்வளவு.

## 3. இனிது நாற்பது

1. நற்சவை-நல்லசபை, கைக்கொடுத்தல்- உதவிபுரிதல் சாலவும்-மிகவும், முத்துஏர் முறுவலாய்-முத்துப்போன்ற பல்லை உடையவளே. ஆங்கு-அதுபோல், தெற்றவும்-தெளிவாக.

2. கயவர்-கீழ் மக்கள், கையிகந்து-நீக்கி, உள்ளி-நினைத்து எளியர்-சாமானிய), ஒளிபட-புகழ் உண்டாக.

3. தானம்-அழியாமை, ஊனம்-குற்றம்.

## 4. இன்னா நாற்பது

1. இல்வழி-இல்லாத இடத்து, இருள்கூர்-இருள்மிகுந்த சிறுநெறி-சிறிய வழியில், தனிப்போக்கு-தனியே போவது, செலவு-செல்லுதல், வண்மைபுரிவு-கொடுத்தலைப் புரிதல்.

2. நட்டார்-சிநேகிதர். இடுக்கண்-துன்பம், நனி-மிகவும், ஒட்டார்-பொருந்தாதவர், பெருமிதம்-கர்வம், கட்டுஇலா-கட்டுப்பாடில்லாத, மூதூர்-பழைமையான ஊர், உறைவு-வசித்தல், நட்ட கவற்றினால்-விரும்பி உருண்டையாடுதலால்.

3 ஆற்றல்-வலிமை, படை-ஆயுதம். தோற்றம்-உயர் குடிப்பிறப்பு, துணிவு-உறுதி, மாற்றம்-சொல்லின் (வன்மை) முறை.

## 5. நான்மணிக்கடிகை

1. அணி-அழகு. என்ப-என்றுகூறுவர், நலம்-நற்குணம் செல்லும் உலகம்-இறப்பிற்குப்பின் அடையும் உலகம்.

2. இன்னாமை-துன்பம், இரவு-யாசித்தல், மன்னுதல்-நிலைத்தல். இசை-கீர்த்தி, வெகுளி-கோபம்; விடல்-விட்டு விடுதல்,

3. பாழ்-வீண், வாள்+நுதல்-ஒளிபொருந்திய நெற்றி, நட்டோரை-சிநேகிதரை? இனிமை-இல்லாமை, அவை-சபை!

## 6. திரிகடுகம்

1. தாளாளன் - முயற்சியுடையவன், வேளாளன்-உபகாரி, விருந்துஇருக்க - புதிதாய்வந்தோர் பசித்திருக்க, கோளாளன்-ஏற்றுக்கொள்பவன், கேளாக-நட்புடையராக.

2. நச்சி-விரும்பி, எள்ளா-இகழா, மன்னிய-நிலைத்த, பொச்சாப்பு-மறதி, அழுக்காறு-பொறாமை, இகழ்ந்தான்-நீத்தான், நின்ற-நிலைத்த.

3. வியந்து-பாராட்டி, தருக்கல்-கர்வப்படுதல் தாழ்வு-பணிவு, கொன்னே-வீணாக, வெகுளி-கோபம், பெருக்கல்-மிகுத்தல், முன்னி-முன்கரணப்பட்ட, பல்+பொருள்-பல் பொருள், வெஃகுதல்-அடைய ஆசைப்படல், சிறுமை-கீழான தன்மை, படை-ஆயுதம்.

## 7. திருக்குறள்

1. அகன் அமர்ந்து-மனம்விரும்பி, செய்யாள்-இலக்குமி, முகன் அமர்ந்து-முகம்விரும்பி, ஓம்புவான்-காப்பாற்றுவான்.

2. பணிவு-தாழ்வு, அணி-அழகு.

3. நன்றி-உபகாரம், கொன்றார்- அழித்தவர்க்கும், உய்வு-பிழைக்கும்வழி, செய்நன்றி-ஒருவன்செய்த உபகாரம்.

4. யாகாவராயினும் - எவற்றைக்காவாதவராயினும், நா-நாக்கு, காவாக்கால்-காக்காமல் போனால், சொல்இழுக்கு, சொற்குற்றம், சோகாப்பர்-வருந்துவர்.

5. வித்து-விதை, இடும்பை-துன்பம்.

6. ஒழுக்குஆறு - ஒழுக்கமுடையவழி. - அழுக்காறு-பொறாமை, இயல்பு-குணம்.

7. மனத்தொடு - மனத்தினால், வாய்மை - உண்மை, மொழியின்-கூறினால், செய்வாரில் - செய்பவரைக்காட்டிலும், தலை-முதலானவனாவான்..

8. இன்னா-துன்பம்,முற்பகல்-பகல்முன் (காலை). பிற்பகல்--பகல்பின் (மாலை). தாமே-வேண்டாமலே.

9 .பொறி இன்மை- அதிர்ஷ்டமில்லாமை, ஆள்வினை-முயற்சி.

10. உடுக்கை-ஆடை, இடுக்கண்-துன்பம். களைவது-நீக்குவது.

# 3. கதைப் பகுதி

1. பாடுறு - பெருமையான-(இழிச்சிறப்பு). நீடுறு-நீண்ட. பழுமரம்-ஆலமரம்.

2. கொடுமழை-மிக்கமழை, நளிச்சுரம்-குளிர்ச்சுரம்.

3. கன்மத்தை-தீமையை - ஊசிமூஞ்சி-ஊசிபோன்று கூம்பிய முகம். எய்தி-அடைந்து. வல்லியோ-தகுதியுடையவனோ.

1. கோடுஉறு-உச்சியில்பொருந்திய; பேடு-பெண்பறவை; கலிந்து-துன்புற்று; வாடி-வருந்தி.

2. பாங்கன்-நண்பன், சம்புகன்-நரி. அரிதோ-அருமையோ, தேவி-அரசி, ஆடும், நீராடும், மஞ்சனசாலை-நீராடும் இடம், புக்கு-புகுந்து, பொன் அணி-பொன்னாபரணம்.

3. காவலன்-அரசன், ஏவலாளர்-வேலையாட்கள், ஏகி-என்று ஈர்ந்தனன்-இடித்தனர், உபாயம்-தந்திரம்.

# 4. பல்சுவை

1. கார்-மேகம், ககனம்-வானம், நீள்நிலம்-நீண்டபூமி, வார்ஒன்று-வாரால் கட்டப்பட்ட, ' பூங்குழல்-அழகியகூந்தல், மூன்று + பேர் = முப்பேர்.

2. கொழுமை-தயிமன்; கொழுமை-வளமை, வழுத்திடு-சிறப்புமிக்க, வங்கணம்-பணம், மதி-அறிவு: அஞ்சலி-வணக்கம்.

3. இரட்சி-காப்பாற்று, ஒல்லை-துன்பம், ஆரை-யாரை, பதுமத்தான்-பிரமன், புவி-பூமி.

4. நித்தம் - தினமும், தயை - கருணை, கொடை-கொடுத்தல்.

5. வில்லால் அடித்தவன்-அர்ச்சுனன், செருப்பால் உதைத்தவன்-கண்ணப்பன், கல் எறிந்தவன்-சாக்கியநாயனர். பிரம்பால் அடித்தவன்-பாண்டியன், அல்ஆர்.இருள்நிறைந்த, பொழில்-சோலை, அம்பலவானர்-நடராசர், பிதா-தகப்பன்.

6. கைமண்-கைப்பிடிமண், கலைமடந்தை-சரஸ்வதி,எண்சாண்-எட்டுச்சாண்.

7. பட்டாய்-வருந்துவோனே, செல்காலம்-ஆணை சென்ற காலம், செலுத்தினேம்-ஆட்சி செலுத்தினேம், கல்-செம்பு ஆனேம்- கல்லுச்சிலை- செம்புச்சிலை ஆனேம். காள்-அசை